# தாய்வீடு




THAIVEEDU JULY 2019 ஜுலை HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com

# பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு:




ISSN 2369-3657



# ஆறாந்திணைச் சமூகம் சுட்டும் ஆய்வுக் களங்கள்

- பொன்னையா விவேகானந்தன் -

பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வட அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் நடைபெறுகின்றது என்ற செய்தி வட அமெரிக்கா எங்கும் வாழும் தமிழர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கிப் பெருமைப்படுத்தியிருக்கின்றது.

வடஅமெரிக்காவில் தமிழ்ப்பணி ஆற்றி வரும் வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை தன்னுடைய 32வது ஆண்டு நிறைவையும் சிக்காக்கோ தமிழ்ச்சங்கம் தன்னுடைய 50வது ஆண்டுநிறைவையும் கொண்டாடும் இவ்வாண்டில் பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையும் இணைத்து இதை முப்பெரும் விழாவாகவே உருவாக்கியிருக்கின்றனர்.

அளவிட முடியாத உழைப்பையும் இடையறாத முயற்சியையும் பின்புலத்தில் கொண்டே இந்த விழாக்கள் இடம்பெறுகின்றன. உறுதியான மொழிப்பற்றும் பண்பாட்டுத் தொடர்ச்சியில் பேரார்வமும் கொண்ட பலரின் வலுவான இணைப்பே இந்த நிகழ்வுகளுக்குக் காரணம் என்பதைப் பலரும் அறிவர்.

இவ்வாறான விழாக்கள் மொழி, கலை வாயிலாக ஒன்றுகூடுதல் என்பதற்கு அப்பால், உறுதியும் நிரந்தரமும் கொண்ட விளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும் என்றே தமிழ் ஆர்வலர் பலரும் விரும்புவர். சிக்காக்கோ நகரில் நடைபெறும் இந்த முப்பெரும் விழாவும் எத்தகைய சமூகப் பயனை விளைவிக்கப் போகின்றது என்ற எதிர்பார்ப்பைப் பலருக்கும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இதுவரை நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், அனைத்துலகம் தழுவிய தமிழர்களை இணைத்து தமிழியல் வாழ்வின் தொன்மையையும் மேன்மையையும் பேணி வந்திருக்கின்றது. காலத்துக்கு ஏற்ப, புதுமைகளை உள்வாங்கி ஆய்வுகளின் வழியே தமிழியலை வளர்த்துச் சென்றிருக்கின்றது. இடையே அரசியல் சார்புகளும் வலுநிலையில் ஏற்பட்ட தளர்ச்சியும் மாநாட்டுச் செயற்பாடுகளைத் தாமதப்படுத்தி வந்திருக்கின்றது.

அவற்றைக் கடந்து, மீண்டும் புதுப்பொலிவோடு பத்தாவது மாநாடு எழுச்சி கொண்டிருக்கின்றது. இதற்கு வழி சமைத்து நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்காற்றியிருப்பவர்கள் வடஅமெரிக்காவில் வாழும் தமிழர்களே என்பதில் ஐயமில்லை.

தாயகங்களுக்கு வெளியே, நிரந்தரமாக வாழத் தலைப்பட்டுவிட்ட தமிழர்களே பலமாக ஒன்றிணைந்து இந்தப் பணியை நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

தாயகத்துக்கு வெளியே நிரந்தர இருப்புகளை ஏற்படுத்தி, பொருளாதாரத்திலும் ஒருமைப்பாட்டிலும் வலுவான சமூகமாக வாழத் தலைப்பட்டிருக்கும் தமிழ்ச் சமூகம் தனித்துவமாக அடையாளப்படுத்திப் பார்க்க வேண்டிய ஒன்றாகவே காட்சி தருகின்றது.

இலக்கியங்கள் காட்டிச் சென்ற ஐந்திணை வாழ்வியலும் தாயக வாழ்வியல் அமைவிடங்களுக்கு ஏற்றவையாக இருந்தன. கடந்த ஐம்பது ஆண்டுகள்வரை இந்த ஐந்து திணைகளுமே எம் வாழ்வின் நிலைக்களன்களாக இருந்தன.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் பல்வேறு காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்த தமிழர்கள், மாறுபட்ட பண்பாட்டுச் சூழலில் தமக்கெனத் தனித்துவமான வாழ்வியலைக் கட்டமைத்திருக்கின்றனர். இது இலக்கியம் காட்டிய ஐந்து திணைகளிலிருந்தும் மாறுபட்டது. ஆறாம் திணை எனக் கருதத்தக்க இயல்புகளைக் கொண்டது.

மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது போல, இந்த வாழ்களத்தைப் பனியும் பனி சார்ந்த நிலமுமாகக் கருதலாம்.

வடஅமெரிக்காவில் மட்டும் ஏறக்குறைய ஐந்து இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். ஐரோப்பிய நாடுகளில் மேலும் ஐந்து

*தொடர்தல் 85ம் பக்கம்*

# ஆறாந்திணைச்...

84ம் பக்கத் தொடர்ச்சி...

இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். இந்த எண்ணிக்கை பல வழிகளிலும் அதிகரித்தே செல்கின்றது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக, சிறுகச் சிறுக புலம்பெயர்ந்து இன்று குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தனிச் சமூகமாகவே, பிறவினத்தோர் கவனத்தை ஈர்க்கும் வகையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் வழியாகத் தோன்றிய, தோன்ற விருக்கின்ற தலைமுறையினர் பெரிதும் இந்த நாடுகளிலேயே தங்கிவிடப் போகின்றனர். இளைய தலைமுறையினர் கல்வி, ஆற்றல், கடின உழைப்பு என்பவை வாயிலாக, வாழ்வின் உயர்தளங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர். வாழும் நாடுகளின் அரசியல் கட்டமைப்புகளிலும் இணைந்து தனி முத்திரை பதித்து வருகின்றனர்.

இவர்களே பல மில்லியன் டொலர் செலவில் தமிழ் இருக்கைகளை உருவாக்கி வருகின்றனர். ஆண்டுதோறும் பெரும் பொருட் செலவில் பண்பாட்டு விழாக்களை நடத்தி வருகின்றனர். இப்போது முப்பெரும் விழாவை முன்னெடுத்திருக்கின்றனர்.

அரசியல், இயற்கை போன்றவற்றால் அவ்வப்போது பெரும் அல்லல்களுக்கு ஆளாகும் தாயகங்களைப் பேணவும் அவற்றின் வளர்ச்சிக்கு உதவ வல்லவர்களாகவும் இருப்பவர்கள் தாயகம் கடந்து வாழும் தமிழர்களே என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான ஆற்றல்கள் பொருந்திய ஆறாந்திணைத் தமிழ்ச் சமூகத்தை மொழி, பண்பாடு சார்ந்து வளர்த்துச் செல்லவும் தாயகங்களோடான உறவுகள் விடுபடாதிருக்கவும் முறையாகத் திட்டமிடப்பட்ட காத்திரமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழுவானது, இதற்கெனத் தனித்துறையை நிறுவி, மாநாடுகள் வாயிலாக ஆய்வுகளை மேற்கொண்டு, ஆறாந்திணைத் தமிழ்ச் சமூகத்தை இனவடையாளம் சார்ந்தும் தாயகம் சார்ந்தும் பேணிச்செல்லும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆறாந்திணைத் தமிழ்ச் சமூகம் மொழி, கலை, பண்பாட்டுப் பேணல்கள் தொடர்பில், கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றது என்பதை எளிதில் மறுத்துவிட முடியாது. குறிப்பாக இந்நாடுகளில் பிறந்து வளரும் இளைய தலைமுறையினர் இனவடையாளங்கள் தொடர்பில் இடைவெளிகளுக்குள்ளாகி வருகின்றனர்.

இச்சமூகம் எதிர்கொள்ளும் சில சவால்களை அடையாளம் காண்போம்.

பலவினத்தோர் கலந்து வாழும் சூழலில் ஒவ்வோர் இனமும் தனித்துவப் பண்பாட்டை எப்போதுமே பின்பற்றிச் செல்வதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. வாழும் நாடுகளில் காணப்படும் பொதுமைப் பண்பாட்டையே பெரிதும் பின்பற்றிச் செல்லவேண்டிய நிலை உருவாகின்றது. இவ்வாறானோருக்கு முறைப்படுத்தப்பட்ட கல்வி வாயிலாகவே இனவடையாளங்களை ஊட்ட வேண்டியிருக்கின்றது. அதற்கான பொருத்தமான கல்விப் பொறிமுறை இன்னமும் உருவாக்கப்படவில்லை.

கனடா போன்ற நாடுகளில் தமிழ்மொழிக்கல்வி வகுப்புகள் நடைபெற்றாலும் அறுபது விழுக்காடு மாணவர்கள் தமிழ் மொழிக் கல்வி வகுப்புகளுக்குச் செல்வதில்லை. பல மாநிலங்களிலும் தொழில் நிமித்தம் பரந்து வாழும் தமிழ்ச் சமூகத்தினர் பொருத்தமான மொழிக்கல்வி இன்றி அவதியுறுகின்றனர்.

இத்தலைமுறையினரின் மொழி. கலை, பண்பாடு சார்ந்த கல்வித்தேவைகளை நன்குணர்ந்து இவர்களுக்கான இணைய வழிக் கல்விமுறை உருவாக்கப்பட வேண்டும்.

தமிழர் பண்பாடு பெரிமைக்குரியது எனத் தமிழர்கள் மட்டுமல்ல, பல உலகளாவிய அறிஞர்களும் கூறி வருகின்றனர். தாயகத்தின் அகப்புறச் சூழலோடு ஒட்டி உருவான பண்பாட்டு மரபுகளும் பழக்கவழக்கங்களும் பிற நாடுகளின் மாறுபட்ட சூழல்களில் வாழும் தமிழர்களுக்கு ஏற்றதாக அமையுமா? என்ற கேள்வி எழுகின்றது.



எடுத்துக்காட்டாக பொங்கல் கொண்டாடுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் குறிப்பிடலாம்.

கதிரவனுக்கு நன்றி செலுத்தும் பொங்கல் விழா முற்றத்திலே பொங்குவதற்குரியது. ஆனால் வடஅமெரிக்க நாடுகளில் முற்றத்தில் பொங்குவது சட்டச் சிக்கலைக் கூட ஏற்படுத்தவல்லது. குளிர்மிக்க காலமாகவும் அது அமைந்து விடுகின்றது. இந்நிலையில் பலரும் சமையறையிலேயே பொங்குகின்றனர்.

புதிய தலைமுறையினர் எமது பண்பாடு சார்ந்து அதிக வினாக்களை எழுப்புகின்றனர். ஒவ்வொரு செயலுக்கும் விளக்கம் கேட்கின்றனர். ஏன் நிறைகுடம் வைக்க வேண்டும்? அதன் விளக்கம் என்ன? ஏன் மாவிலை கட்ட வேண்டும்? ஏன் பெரியவர்களைக் காலில் விழுந்து வணங்க வேண்டும்? என்றெல்லாம் எழும் வினாக்களுக்கு அவர்கள் ஏற்கும்படியான விளக்கங்களைக் கூற வேண்டியிருக்கின்றது.

இவற்றிற்கான விளக்கங்கள் இங்குள்ள பல பெரியவர்களுக்கே தெரியாமல் இருக்கின்றன. இந்நிலையில் ஆறாந்திணைத் தமிழ்ச் சமூகத்தினர் பின்பற்ற வேண்டிய பண்பாட்டு மரபுகளை வகுத்தும் தொகுத்தும் விளக்கத்தோடு அவர்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு வாழும் தலைமுறைக்கு உரியது.

ஓரினத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் மரபுகளையும் காவிச் செல்வதில் கலைகளுக்கு முதன்மையான பங்கு உண்டு. ஆறாந்திணைச் சமூகம் ஆடற்கலையையும் இசைக்கலையையும் முதன்மையாகக் கற்று வருகின்றது.

இக்கலை வெளிப்பாடுகள் பெரிதும் தமிழ்மொழியையோ, தமிழர் பண்பாட்டு மரபுகளையோ தாங்கியதாக இல்லாமல், பெருமளவு வடமொழிச் சொற்களையும் தெலுங்குக் கீர்த்தனைகளையுமே கொண்டிருக்கின்றன. பாடுபொருள் கூட பெரிதும் இந்துமதம் சார்ந்தே அமைந்து விடுகின்றது. தமிழ்க்கலைகள் எனக் கூறப்படும் இவற்றில் தமிழியல் விழுமியங்கள் குறைவாகவே உள்ளடக்கப்படுகின்றன.

இந்நிலை தொடருமானால் எதிர்காலத்தில் இக்கலைகளைக் கற்போர் தாம் தமிழர்தானா என்ற ஐயத்தை உருவாக்க வழிகோலிவிடும்.

இக்கலைகளை முற்றிலும் தமிழ்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும் சமூகம் சார்ந்த அமைப்புகளுக்கு உண்டு.

ஆறாந்திணைச் சமூகத்தின் இளந்தலைமுறையினர் தாயகத்தோடான உறவுகளைப் பேணுவதில் இடைவெளிகளைக் கொண்டுள்ளனர். தாயகப் பற்றும் உறவுகளை நேசிக்கும் தன்மையும் தலைமுறைதோறும் குறைந்துகொண்டே செல்லுகின்றது. தாயக சமூகத்தோடான உறவுப்பாலத்தை எவ்வாறு அமைத்துப் பேணுவது என்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தமிழர் பல்வகை வரலாறுகளை நீண்ட காலமாகக் கொண்டுள்ளனர். நில வரலாறு, மொழி வரலாறு, பண்பாட்டு வரலாறு, இலக்கிய வரலாறு, வழிபாட்டு வரலாறு என தமிழரின் வரலாற்றுப் பரப்புகள் நீண்டு செல்கின்றன. இவை யாவும் போதிய சான்றுகளுடன் இளையோருக்கும் புரியும் மொழியிலும் வடிவத்திலும் எழுதப்பட வேண்டும். தான் சார்ந்த இனத்தின் வரலாற்றுப் பெருமைகளை உணரும்போதுதான் இனப்பற்றும் மொழிப்பற்றும் வலிமை பெறும்.

தமிழருக்கான விழாக்கள், உணவுகள், ஆடை அணிகலன்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் யாவும் புதிய வடிவங்களில் இவர்களுக்கு ஊட்டப்படல் வேண்டும்.

இவ்வாறாகப் பல வாழ்வியல் சவால்களை ஆறாந்திணைச் சமூகம் எதிர்கொண்டுள்ளது. இவற்றுக்கான தீர்வுகளைத் தனி மனிதரோ அல்லது தனி நிறுவனமோ உருவாக்க முடியாது. சமூகத்தின் அனைத்துத் தரப்புகளும் இணைந்தே தீர்வுகளை ஆய்வுகளின் வழியாகப் பெறல் வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, உலகத் தமிழ் ஆய்வுகள், ஆறாந்திணைத் தமிழர்களை முன்னிறுத்தி தனித்துவமாக மேற்கொள்ளப்பட வேண்டும். பொருளாதாரப் பலமும் அடையாளம் சார்ந்த தேடலும் கொண்ட இச்சமூகம் முறையாக இனஞ் சார்ந்து கட்டமைக்கப்படுமானால் தாயகங்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வலிமையான சமூகமாக உருவாகவும் முடியும். யூத இனம் இவ்வாறுதான் கட்டமைக்கப்பட்டு வாழ்ந்தது. அக்கட்டமைப்பே இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கியது.

இந்த மாநாடுகள் எதிர்காலத்தில் மேற்குறிப்பிட்ட தேவைகளை முன்னிறுத்தி முனைப்போடு இயங்க வேண்டும். ஆறாந்திணைச் சமூகத்தின் சிக்கல்களை மையப்படுத்திய தலைப்புகளில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். குறிப்பாக இளையோரை உள்வாங்கி விழிப்புணர்வு நிகழ்வுகள் உருவாக்கப்பட வேண்டும். இப்பணிகளுக்கான காலகட்டம் இதுவே.

இப்பணிகளை நாம் முன்னெடுக்கத் தவறுவோமாக இருந்தால், ஐம்பது அல்லது நூறு ஆண்டுகளுக்குப் பின் சில மில்லியன் தமிழர்கள் அடையாளங்களை மறந்து பிற நாடுகளில் வாழ்வார்கள். அவர்களின் அறிவும் ஆற்றலும் இனத்துக்குப் பயன் நல்கும் வாய்ப்பு பெரிதும் இல்லாது போய்விடும்.

தமிழின் மேன்மை தொன்மையில் அல்ல,
தொடர்ச்சியிலேயே
தங்கியிருக்கின்றது.



*vivekanandan.p@thaiveedu.com*

# கீழடி - சங்ககாலத் தமிழர்களின் நகர நாகரிகம்





தமிழர்களின் பெருமையே பழமையான தமிழ்மொழியும் நாகரிகமான வாழ்க்கை முறையும் தான். வெண்பாமாலை நூலில் வரும் 'கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி' என்று நாம் பெருமை பேசினாலும் அந்த பெருமைக்கான சான்றுகள் எல்லாமே சங்க நூல்களில் மட்டுமே உள்ளது.

தமிழர்களின் நாகரிகம் எப்படி இருந்தது என்பதற்கான சான்றுகள் பாகிஸ்தான் நாட்டில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள இரவி நதிக்கரையிலுள்ள அரப்பாவிலும், அங்கிருந்து 400கிமீ தொலைவில் சிந்து நதிக்கரையிலுள்ள மொகஞ்சதாரோ என்ற இடத்திலும், முப்பதாயிரம் மக்கள் வாழ்ந்ததற்கான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் கொண்ட ஊர்கள் அப்படியே மண்ணுக்குள் புதைந்த நிலையில் கடந்த நூற்றாண்டில் நமக்கு கிடைத்துள்ளன.

அதற்கு வலுச்சேர்க்கும் விதமாக திரு ஆர். பாலகிருஷ்ணன் (இ.ஆ.ப.) அவர்களின் சிந்துவெளியில் அமைந்துள்ள ஊர்கள், மலைகளின் பெயர்கள், சங்கத் தமிழ் இலக்கியங்களிலுள்ள பெயர்களை இன்றளவும் தாங்கி நிற்கின்றன என்ற அவரின் ஆய்வும் வலுச்சேர்க்கிறது.

## முதல் பொறி:

1974-ம் ஆண்டு உழவிற்காக தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து கிடைத்த செங்கற்களை மாணவன் ஒருவன் கீழடி பள்ளியின் ஆசிரியரான திரு. பாலசுப்பிரமணி அவர்களிடம் காண்பிக்கின்றான். அந்த செங்கல்லை பார்த்த ஆசிரியர் அவை சங்ககாலத்தை சேர்ந்தது என அறிகிறார். இதுதான் கீழடி வரலாற்றின் முதல் பொறி.

இயல்பிலேயே வரலாறு சார்ந்த விடயங்களில் ஆர்வமுள்ளவரான அவர் சில மாணவர்களை அழைத்துக்கொண்டு செங்கல் கிடைத்த அந்த கிணற்றை பார்வையிடுகிறார். கழுத்துக்கு மேலே தலை மட்டுமுள்ள மண்பொம்மை, கருப்பு-சிவப்பு வண்ணம் கொண்ட மண் குவளை, மண்டை ஓடுகள், எலும்புகள், நாணயங்கள், தாழிகள் எனக் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் பாதுகாக்க பள்ளியில் இடமில்லாத காரணத்தால் அவருடைய வீட்டிலேயே வைத்துவிட்டு, அப்போது ஒருங்கிணைந்த இராமநாதபுர மாவட்ட ஆட்சியருக்கு கீழடியில் கிடைத்த பொருட்களை பற்றி கடிதம் ஒன்றை அனுப்புகிறார். அதற்கு இன்றுவரை பதிலில்லை.

அடுத்த ஆண்டே பள்ளியிலேயே 'History Corner' என்ற பகுதியை ஏற்படுத்தி கிடைத்த பொருட்கள் அங்கு வைக்கப்படுகின்றன. 1976-ம் ஆண்டு அப்போதைய தொல்லியல் ஆய்வுத்துறையின் இயக்குநர் திரு. நாகசாமி அவர்களை சந்தித்து தகவலை தெரிவிக்க, அவர் ஆய்வாளர் வேதாசலம் அவர்களை அனுப்பி அப்பொருட்களை கொண்டுவந்து சென்னை அருங்காட்சியகத்தில் வைக்க ஏற்பாடு செய்தார். மேலும் வெளிநாடுகளுக்கும் ஆய்விற்கு அனுப்பிவைக்கிறார்.

## காலச்சக்கரம் சுழல்கிறது:

சரியாக 37 ஆண்டுகள் கடந்து 2013-ல் தொல்லியல் ஆய்வாளர்கள் திரு வேதாசலம், திரு அமர்நாத் மற்றும் திரு ராஜேஷ் ஆகியோர் பண்டைய பொருட்கள் கிடைத்த அந்த கிணற்றை நிலத்தின் உரிமையாளர் திரு திலீப்கான் துணையோடு ஆய்வு செய்கிறார்கள். மேலும் வைகை நதிப் படுகையில் நடைபெற்ற கள ஆய்வில் 293 பல்வகை தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள் அடையாளம் காணப்படுகின்றன. அவற்றில் கீழடியை தேர்வு செய்து 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் தொல்லியல் ஆய்வு செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

2015ம் ஆண்டு 43 குழிகளும், 2016ம் ஆண்டு 59 குழிகளும், அமைத்து ஆய்வை மேற்கொண்டனர்.

தமிழகத்தில் நடந்த அகழ்வாய்வுகளில் கட்டடங்கள் கிடைப்பது அரிதான விடயம். ஆனால் அரிக்கன்மேடு, காவிரிப்பூம்பட்டினம், உறையூர், காஞ்சிபுரம் மற்றும் அழகன்குளம் போன்ற இடங்களில் கிடைத்ததைவிட கீழடியில் 10-ற்கும் மேற்பட்ட சங்ககால கட்டடங்கள் கிடைத்துள்ளன.

வரிசை வரிசையாக கால்வாய்கள், அதன் முகப்பிலேயே பெரிய தொட்டிகள், தொட்டிக்கு உட்செல்லவும் வெளிச்செல்லவுமான அமைப்புகள், கால்வாய்த் தடத்தை ஒட்டி சிறிதும் பெரிதுமான ஆறு உலைகள், கால்வாயின் தொடக்கத்தில் வட்டக் கிணறுகள், மூடிய வாய்க்கால்கள், திறந்த மற்றும் சுடுமண் குழாய்களால் ஆன வடி கால்கள் என மூன்று விதமான வடிகால் அமைப்புகள் முதன்முறையாக கிடைத் துள்ளன. சங்ககாலத்தில் கட்டடங்களே இல்லை என்ற கூற்றை இந்த அகழாய்வு மாற்றி அமைத்திருக்கிறது.

மேலும் எழுத்தாணிகள், அம்புகள், முத்திரைக்கட்டைகள், உறை கிணறுகள், சுடுமண் மற்றும் முத்து மணிகள், தந்தத்தினால் ஆன தாயக்கட்டைகள் மற்றும் காதணிகள், சுடுமண் பொம்மைகள், செம்பு, இரும்பு மற்றும் எலும்பினாலான ஆயுதங்கள், வணிகர்களின் எடைக்கற்கள், வடஇந்திய பிராகிருத பெயர்கள் தாங்கிய எழுத்துக்கள், பண்டைய தமிழ் எழுத்து பொறித்த சங்ககால பெயர்கள் (திசன், சந்தன், உதிரன், ஆதன், மடைசி, ஏரவாதன்), ஆப்கானிஸ்தான் பகுதியை சேர்ந்த சூது பவளத்தினாலான மணிகள், ரோமாபுரியை சேர்ந்த மட்பாண்டங்கள் என செழுமையான சங்ககால வாழ்வியல் எச்சங்கள் கிடைத்துள்ளன.

அதேபோல் ஒரு தொழிலகமும், நெசவுக்குரிய தக்கையில் துவங்கி எண்ணற்ற தொழில்நுட்ப கருவிகளும் கண்டறியப்பட்டுள்ளன. பலுசிஸ்தானில் கிடைக்கும் சால்சிடோனி, கார்னீலியன், அகேட் போன்ற அரிய வகை மணிகள், அணிகலன்கள் கிடைத்துள்ளன. பண்டமாற்று முறையில் இந்த அணிகலன்கள் இங்கு வந்துள்ளன.

தமிழர்களுக்கு நகர்ப்புற நாகரிக சான்றுகள் ஏதுமில்லை என்று பரப்புரை செய்யப்பட்டு வந்த நிலையில், கீழடி அகழாய்வு தமிழர்களின் நகர்ப்புற நாகரிகத்தை பறைசாற்றுகிறது.

இந்தியாவில் புகழ்பெற்ற வரலாற்றாளர்கள் பலரும் பழந்தமிழகத்தை ஓர் இனக் குழுச் சமூகமாகத்தான் வரையறுத்தார்கள். சிந்துவெளி நாகரிகத்தைப்போல, ஒரு நகர நாகரிகம் இங்கு இல்லை என்பது அவர்கள் கருத்தின் அடிப்படை. இலக்கிய வர்ணனைகளை மட்டும் வரலாற்று ஆதாரமாக எடுத்துக்கொள்ளமுடியாது. எனவே இலக்கியங்கள் கடந்த ஆதாரங்கள் கண்டறியப்படாத நிலையில் அவர்களின் கருத்துக்கு உயிர் இருந்தது. ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள தரவுகள் அந்த கருத்தியலை தகர்த்திருக்கின்றன. சங்ககாலத்தில் தமிழகத்தில் நகர நாகரிகம் செழிப்புற்று இருந்ததை மெய்ப்பிக்கின்றன.

## ஆய்வுக்குத் தடை:

கீழடியில் இரண்டு ஆண்டுகளாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில், 2017-ம் ஆண்டுக்கான அனுமதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. காரணம் இதுவரை நடைபெற்ற அகழாய்விற்கு அறிக்கை அளித்த பின்பே அனுமதி தர பரிசிலிக்கப்படுமாம்.

குஜராத்திலுள்ள தொழவீரா-வில் 13 ஆண்டுகளும் லோத்தலில் 5 ஆண்டுகளும், ஆந்திராவிலுள்ள நாகார்ஜுனகொண்டாவில் 10 ஆண்டுகளும், அகிசித்ராவில் 6 ஆண்டுகளும் அகழாய்வு செய்தவர்கள், கீழடி ஆய்வை மட்டும் அறிக்கையை காரணம் காட்டி இரண்டே ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டு வருவதின் பின்னணி என்ன என்ற கேள்வி எழுகிறது. ஆதிச்சநல்லூரில் 2005-ல் மேற்கொண்ட அகழாய்வு நிறுத்தப்பெற்று இன்றுவரை ஆய்வறிக்கையும், ஆய்வு முடிவும் வெளிவரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

## கரிம பகுப்பாய்வு:

மொத்தமுள்ள 110 ஏக்கரில் 50 சென்ட் மட்டுமே (ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக) ஆய்வு செய்துள்ளனர். கரிம மூலப் பொருட்களின் மாதிரியை வேதிப்பொருள் ஆய்வகங்களுக்கு அனுப்பி 'கார்பன்-14 பகுப்பாய்வு' எனும் முறையில் ஆய்வு செய்து அப்பொருளின் காலத்தை கணக்கிடுகின்றனர். அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள பீட்டா அனலைசிஸ் ஆய்வு நிறுவனத்திற்கு இவை அனுப்பப்படுகின்றன. அகழாய்வில் கண்டறியப்பட்ட பொருட்களில் எத்தனை பொருட்களின் மூலக்கூறு மாதிரிகளை கார்பன்-14 பகுப்பாய்விற்கு அனுப்பவேண்டும் என்பதை மத்திய தொல்லியல்துறை முடிவு செய்கிறது.

இராஜஸ்தானிலுள்ள காளிபங்கனில் நடத்தப்பட்ட அகழாய்வில் 28 பொருட்களும், தொழவீராவிலிருந்து 20 பொருட்களும், கிரிசராவிலிருந்து 15 பொருட்களின் மாதிரிகளை ஆய்விற்கு அனுப்பிவைத்துள்ளனர். ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள மூலப்பொருட்களின் மாதிரியில் 2 மட்டும்தான் கார்பன்-14 பகுப்பாய்விற்கு அனுப்ப மத்திய தொல்லியல்துறை அனுமதி வழங்கியுள்ளது. குறைந்தபட்சம் 10 பொருட்களின் மாதிரியாவது ஆய்விற்கு அனுப்பவேண்டும் என்பது தொல்லியலாளர்களின் விருப்பம்.

இரும்புக் காலம் தொடங்கி வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியான ஆதாரங்கள் கிடைக்குமிடம் கீழடி. எனவே இந்த ஆதாரங்களை அறிவியல்பூர்வமாக நிறுவ இவ்வாய்வு மிக முக்கியமானது. கீழடி அகழாய்வைத் தொடர அனுமதி மறுப்பதும், அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ள பொருட்களை தேவையான எண்ணிக்கையில் ஆய்வுக்கு அனுப்ப மறுப்பதும் பாரபட்சமானது.

'கீழடி அகழாய்வு பற்றி அறிக்கை கேட்டுள்ளோம். அறிக்கை வந்தவுடன் அகழாய்வை தொடர்வது பற்றி முடிவு செய்வோம்' என்கின்றனர் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சரும், தொல்லியல் துறையின் தலைமை இயக்குநரும் ஒத்த குரலில்.

தொடர்தல் 87ம் பக்கம்

# முப்பெரும் விழாப் பணிகள் - ஒரு பார்வை

**- மணி குணசேகரன் -**

தமிழர் வரலாற்றில் ஒரு முத்திரை பதிக்கும் நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. முத்தமிழ், முக்கனி, மூவேந்தர் வரிசையில், சிகாகோவில் வரும் ஜுலை 4 முதல் 7ம் நாட்களில் 10ம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 32ம் தமிழ் விழா, சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா என முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழா சீரோடும் சிறப்போடும் நடந்திட, வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையுடன் இணைந்து தோளோடு தோள் கொடுத்து சிகாகோ தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர்களும் தன்னார்வத் தொண்டர்களும் உழைத்து வருகின்றனர். அனைவரின் பங்கும் மிளிர்ந்திட, சிரமமின்றி நடந்திட பல குழுக்களை உருவாக்கி பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் செயல் வீரர்கள் அனைவரும், உலகம் வியக்கும் அளவுக்கு வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக்கொண்டு அரும் பணியாற்றி வருகின்றனர். இன்றைய நிலையில், 35க்கும் மேற்பட்ட குழுக்கள், 400க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் என ஆர்வத்துடன் செயல்பட்டு வருகின்றனர். நாட்கள் நெருங்க நெருங்க, மேலும் பல குழுக்களும் அமைக்கப்படும்.

நிறைந்த நீரோடு வளைந்தோடும் நதிகள் வளமார்ந்த தமிழகத்தின் செல்வங்கள். கரும்பிடைத் தேனும், கடைமடை வாளை மீனும், கன்னியர் பறித்துவரும் செங்கழு நீர்ப் பூவும், கழனியில் உழுவோர் கண்டெடுத்த ஆமைகளும், காவிரியின் நீர்ப் பெருக்கால் திகழ் சோழ வளநாட்டை ஆட்சி புரிந்தவர் கரிகாலச்சோழர். 2000 ஆண்டுகளுக்கு முன்பு, அவர் கட்டிய 'கல்லணை' தமிழர், தொன்மைக்காலத்தில் தொழினுட்ப அறிவில் சிறந்திருந்தனர் என்பதற்கு அடையாளம். இன்றும் உலகம் வியக்கும், தமிழரின் தொழில்நுட்ப அறிவின் சின்னமான, சிறப்போடும் வலிமையோடும் இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் கல்லணையின் மாதிரி வடிவம் விழாவின் முகப்பில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளது.

தமிழின் தொன்மையையும் தமிழரின் நகர நாகரிக முதிர்ச்சியையும் பறை சாற்றுகின்ற கீழடியில் நடைபெறும் தொல்பொருள் ஆராய்ச்சிகள். 'கீழடி நம் தாய்மடி' என்பதே உலகத் தமிழாராய்ச்சி கருத்தரங்கின் கருப்பொருள். கீழடியின் மாதிரி வடிவமும் காட்சிக்கு அமைக்கப்படவுள்ளது.

பொன் ஒளி சேர் மாலையணிந்து, மின்னொளியாய் வாள் வீசி, மண் மீது மாற்றார் படை அழிக்கும் திண் தேர் மன்னன் இராஜேந்திர சோழன், தமிழ் உலகு புகழ் சோழ மன்னர் ஆவார். 11ம் நூற்றாண்டின் தலை சிறந்த மன்னரான இராஜேந்திர சோழர், வடக்கே கங்கை வரை படையெடுத்துச் சென்று அங்குள்ள மன்னர்களை வீழ்த்தி தன் பேரரசை நிறுவி 1000 ஆண்டுகள் ஆகின்றன. கப்பற்படை அமைத்து தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றை வெற்றிகொண்டு தமிழரின் வீரத்தை உலகுக்குக் காட்டிய மாவீரர் இராஜேந்திர சோழரின் வரலாறு நாடகமாக அரங்கேறவுள்ளது. அதில் தமிழ் நாட்டிலிருந்து வரும் கலைஞர்களோடு, இங்குள்ள கலைத்திறன் மிகுந்த தமிழ்ச்சங்க உறுப்பினர்களும் பெருமளவில் பங்கேற்பர்.

உலகப்பொதுமறை தந்து தமிழனின் அறிவாற்றலை உலகுக்கு உரைத்த பொய்யாமொழிப்புலவர் சிலை அமெரிக்காவில் நிறுவிட வேண்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் தமிழ் நாட்டின் சிறப்புமிகு விஜிபி குழுமம், திருவள்ளுவர் சிலையை நன்கொடையாக கொடுத்துள்ளது.

தமிழின் பண்டைய இலக்கியங்கள் முதல் இந்நாள் இலக்கியங்கள் வரையிலான நூல்கள், ஆராய்ச்சிக்கட்டுரைகள், அறிஞர்களின் அரிய படைப்புகள், மாதாந்திர இதழ்கள், செய்திமலர்கள், ஒலி நாடாக்கள் என 4 இலட்சத்திற்கும் மேற்பட்டவைகளைத் தன்னகத்தே கொண்ட 'ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்', அரிய நூல்களை காட்சிப்படுத்தவுள்ளது. குறிப்பாக திருக்குறளின் முதன் முதல் பதிப்பு நூலை காட்சிப்படுத்தவுள்ளார்கள்.

தமிழனின் தொன்மையான இசை பறை. தொன்மையை பேணி பாதுகாப்பது நமது இயல்பு. சிகாகோ பொன்விழாவை வெளிப்படுத்தும் ஒருமுகமாக 'பொன் பறை' இசைக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. 50 பேர் தங்கள் உணர்வையும் திறமையையும் வெளிப்படுத்தி விழா அரங்கில் இசைக்க பயிற்சி எடுத்து வருகின்றனர்.

இன்றமைந்தது இன்றே தீர்ந்ததென நில்லாது, தமிழின் பெருமையும் வளமையும் மனித இனம் உள்ளவரை நிலைக்க வேண்டும் என்பதால் நாம் செய்கின்ற பணிகள் யாவும் அடுத்த தலைமுறைக்கும் சென்றடைய வேண்டும் என்பதில் சிகாகோ தமிழ்ச் சங்கம் உறுதியுடன் இருக்கிறது. இளையோருக்கு தமிழ் உணர்வு ஊட்டுவதும், தமிழ்அறிவை மேம்படுத்துவதும், அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதும், தமிழ்ப் பணிகளில் ஈடுபடுத்துவதும் முக்கிய செயலாகும். அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்காக பல போட்டிகள் நடைபெறவுள்ளது. போட்டிகளில் பங்கெடுத்துக்கொள்ள பெரும் எண்ணிக்கையிலர்னோர் முன்வந்துள்ளார்கள். அதற்காக இளையோர் கடும் பயிற்சி செய்து வருகிறார்கள்.

உங்கள் 2019 கோடை விடுமுறையின் ஜுலைத்திங்கள் முதல் வாரத்தினை சிகாகோவில் உங்கள் தமிழ் உறவுகளுடன் கொண்டாட அன்புநிறை ஆர்வத்துடன் அழைக்கிறோம்! உங்கள் மனம் நிறை ஆதரவை அன்புடன் மீண்டும் வேண்டுகிறோம்!

**- மணி குணசேகரன்**
**முதன்மைப் பணியாளர்**
**சிகாகோ தமிழ்ச்சங்கம்**

■ ■ ■

# கீழடி - சங்ககாலத்...

86ம் பக்கத் தொடர்ச்சி...

**ஓரவஞ்சனை:**

கீழடியோடு அகழாய்வு துவக்கப்பட்ட இடங்கள் வாட்நகர் மற்றும் பிஞ்ஜோர். வாட்நகர் பிரதமர் மோடியின் சொந்த ஊராகும். பிஞ்ஜோர் ராஜஸ்தானில் உள்ளது. இந்த இரண்டு இடங்களிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அகழாய்வு நடந்து முடிந்துள்ளது. 2017-ம் ஆண்டுக்கான துவக்க நிகழ்ச்சி வாட்நகரில் கடந்த நவம்பர் 7-ம் தேதியே கொண்டாடப்பட்டு விட்டது. பிஞ்சோரில் சனவரி 1-ம் தேதி துவக்க விழா நடந்துள்ளது. இங்கெல்லாம் இவர்கள் அறிக்கையைப் பெற்றுத்தான் அடுத்த ஆண்டிற்கான அனுமதியை வழங்கினார்களா என்பதை தெளிபடுத்த வேண்டும்.

2005-ம் ஆண்டு நடந்து முடிந்த ஆதிச்சநல்லூர் அகழாய்வு முடிவு மற்றும் அறிக்கை தற்போதுவரை வெளிவரவில்லை. அகழாய்வு முடிந்து 12 ஆண்டுகளுக்கு பிறகும் அறிக்கையை வெளியிட முயற்சி செய்யாத தொல்லியல்துறை, அகழாய்வு நடந்துகொண்டிருக்கும் இடத்தின் அறிக்கையை கேட்டு அகழாய்வை நிறுத்துகிறது. இவை இரண்டிற்கும் இருப்பது ஒற்றை நோக்கம்தான்.

கீழடியின் முக்கியத்துவம் அனைத்து வகையிலும் உணரப்படவேண்டும். அடையாளங்களை அழிப்பதையும், மறைப்பதையும் வெளிப்படையாக செய்யும் அதிகார, ஆதிக்கவர்க்க அரசியலின் பார்வையில் இப்போது தமிழர் வரலாறு அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு கிடைத்துள்ள 5000-க்கும் மேற்பட்ட பொருட்களில் மத அடையாளம் சார்ந்த பொருட்கள் என்று எதையும் சொல்லமுடியாது. பெருமதங்கள் உருவாவதற்கு முன்பே சிறந்து விளங்கிய தமிழர் நாகரிகத்தின் அடையாளம் கீழடி.

மொழியியல் அறிஞர் கால்டுவெல், தமிழ் மொழியின் சிறப்பை பற்றி கூறும்போது இது ஒரு சமயசார்பற்ற மொழி என்று மதிப்பீடு செய்தார். இந்த மதிப்பீட்டிற்கும், கீழடி நாகரிகத்திற்கும் இருக்கின்ற ஒற்றுமையை புரிந்துகொள்ள முடிகிறது.

தொடரச் செய்வதும், கிடைத்த பொருட்களை தென்னிந்திய தொல்லியல் தலைமையிடமான மைசூருக்கு கொண்டு செல்லாமல், கிடைத்த இடத்திலேயே கள அருங்காட்சியகம் அமைத்து பாதுகாப்பதும், தமிழ்ச்சமூகத்தின் அர்த்தமிக்க வாழ்வியல் வரலாற்றுச் சாரத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

இல்லாத சரசுவதி நதியைக் கண்டறிய கோடிக்கணக்கில் செலவிட்டுக் கொண்டிருக்கிற மத்திய அரசு, அறிவியல் பூர்வ கண்ட இந்த அரசுதான் கீழடியில் கண்டறியப்பட்ட பொருட்களை காலப் பகுப்பாய்விற்கு அனுப்ப வெறும் 1 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

இந்த அப்பட்டமான வரலாற்றுத் துரோகத்திற்கு எதிராக, தமிழக அரசும், அரசியல் கட்சியினரும், அறிவுத்துறையினரும், ஊடகவியலாளர்களும், படைப்பாளிகளும், எழுத்தாளர்களும், வரலாற்றாய்வாளர்களும், தமிழறிஞர்களும், கலைத்துறையினரும், மாணவர்களும், இளைஞர்களும், தமிழர்



தேசிய இனங்களின் தனித்துவமான பண்பாட்டின் மீதும், வரலாற்றின் மீதும் ஒரு பெருந்தாக்குதல் அரங்கேறிக் கொண்டிருக்கும் இந்த காலத்தில், கீழடியில் கிடைத்துள்ள நாகரிகத்தின் எச்சங்களை பாதுகாப்பதும், அங்கு அகழாய்வை

மான ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்ட கீழடியில் ஆய்வைத் தொடர அனுமதி மறுக்கிறது. இராமாயண அருங்காட்சியகத்தை அயோத்தியில் அமைக்க ரூபா 151 கோடியும், கன்னியாகுமரியில் அமைக்க ரூபாய் 15 கோடியும் ஒதுக்கி கட்டி முடிக்கப்பெற்று திறப்புவிழாவும்

என்ற ஒற்றை அடையாளத்துடன் தொன்மையான தமிழர் வரலாற்றை மீட்டெடுக்க ஒன்றுபட்டு போராட முன்வரவேண்டும்.

***நன்றி: அறிவாயுதம் இதழ், கீற்று இணையத்தளம்***

■ ■ ■

# நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு: இனவாதம் மொழியோடு தொடுத்த போர்

- தீபச்செல்வன் -

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியினால் 1964ம் ஆண்டு இந்தியாவின் புதுடில்லியில் தொடங்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மன்றம், உலகில் உள்ள தமிழ் அறிஞர்களை ஒன்று திரட்டி, தமிழை வளர்க்கவும் வளம்படுத்தவும் தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த திட்டமிட்டது. 26வது சர்வதேச உலகக் கீழைத்தேயக் கல்வி மாநாட்டின்போதே இதற்கான முயற்சிகள் இடம்பெற்றன. தனிநாயகம் அடிகளாரும், வ.ஐ. சுப்பிரமணியம் அவர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்ட பேராசிரியர்களுக்கு அழைப்பு விடுத்தனர். 1964 ஜனவரி ஏழாம் திகதி உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முதல் சந்திப்பு டில்லியில் இடம் பெற்றது.

முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவிலும் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தமிழகத்திலும் மூன்றாவது மாநாடு பிரான்சிலும் நடைபெற்றது. பிரான்சில் நடைபெற்ற மாநாட்டில் நான்காவது மாநாட்டை ஈழத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிடப்பட்டது. இதன்படி நான்காவது உலகத் தமிழாராச்சி மாநாடு 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ம் திகதி முதல் 9ம் திகதிவரை இடம்பெற்றது. தவத்திரு தனிநாயகம் அடிகளாரினால் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து வைவப ரீதியாக நிகழ்வு தொடங்கப்பட்டது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கிய ஈழத்தில், இஸ்லாமியத் தமிழ், கிறிஸ்வதத் தமிழ் இலக்கியங்களால் செழுமை பெற்ற ஈழத்தில், தனித்துவமான பண்பாடும் பாரம்பரியமும் தொன்மையும் மிக்க ஈழத்தில், உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பெரும் எழுச்சியாய் நடந்தது. யாழ் நகரமே பாரம்பரிய பண்பாட்டின் கோலத்தின் காட்சியில் இருந்தது. தாம் பேசும் மொழிக்கு தமிழர்கள் விழா எடுத்தனர். ஈழத்தில் இன ஒடுக்குமுறைக்கான கருவியாக துப்பாக்கிகள் மாத்திரமின்றி மொழியும் பிரயோகிக்கப்பட்டது. 1956ல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது மொழி ஒடுக்குமுறைக்காகவே என்பது வரலாறு.

ஈழத்தீவில் தமிழ் மக்களின் அறிவையும் மொழியையும் ஒடுக்கவே தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. உலகத்தமிழராய்ச்சி மாநாடு என்பது உலகளவில் தமிழ் மொழி குறித்த ஆராயச்சி தொடர்பானது. ஆனால் அம் மாநாட்டை கண்ணுற்ற அன்றைய அரசு, ஈழத் தமிழ் இனத்தின்மீது இனவெறி வன்முறை கொண்டு தாக்கியது. அதுவரை காலமும் ஈழத்தில் தமிழ் மக்கள் தமது அடையாளத்தின் பொருட்டு, எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்களோ, அப்படியே இம் மாநாட்டில் கலந்து கொண்டவர்களையும் படுகொலை செய்து உலகத் தமிழாராய்ச்சி போன்ற பண்பாட்டு செயல்களுக்கு ஈழ மக்களுக்கு உரிமையில்லை என்று காட்ட முற்பட்டது.

இந்தப் படுகொலையின் பின்னணியில் ஆக்கிரமிப்பு அரசியலே இருந்தது. உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் அரசியல் தலையீடுகள், நோக்கங்கள் அற்ற வகையிலேயே இடம்பெற்று வந்தது. யாழில் இடம்பெறும் மாநாட்டிற்கு அன்றைய பிரதமர் சிறிவோ பண்டார நாயக்காவை அழைக்க வேண்டும் என்று தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கான கிளையில் உள்ள சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் பெரும்பான்மையானவர்கள் அதை மறுத்துள்ளனர். இதனால் சிறிமாவுக்கு ஆதரவானவர்கள் கிளையிலிருந்து விலகி மாநாட்டை புறக்கணிப்பதாக தெரிவித்தனர்.

தமிழாராய்ச்சி மன்றத்தின் அகிலத் தலைவர் மாநாட்டை நடத்துதலே மரபாக இருந்தது. இந்த நிலையில் கிளையை விட்டு சிறிமா ஆதரவாளர்கள் விலகினர். இதையடுத்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் இலங்கை கிளையின் தலைவராக நியமிக்கப்பட்டார். கட்டடக்கலை விற்பன்னர்களாகிய துரைராஜாவும், கோபாலபிள்ளை மகாதேவாவும் செயலாளர், பொருளாளராகவும் நியமிக்கப் பட்டார்கள். தன்னை விருந்தினராக அழைக்காமை காரணமாக சிறிமாவோ அரசு மாநாட்டை குழப்பத் தொடங்கியது. இதனையடுத்து அரச பாடசாலை மண்டபங்கள் மறுக்கப்பட்டன. அத்துடன் அப்போது மேயராக இருந்த சிறிமாவின் ஆதரவாளர் அல்பிரட் துரையப்பா யாழ் திறந்த வெளியரங்களில் நிகழ்வுகளை நடத்தவும் அனுமதி தர மறுத்தார்.

இந்த மாநாட்டை தோல்வியுறச் செய்ய வேண்டும் என்று நினைத்த சிறிமா அரசு, மாநாடு தொடர்பான செய்திகளை இருட்டடிப்பு செய்தது. ஆனால் இலங்கைத் தீவில் உள்ள தமிழ் திரைமாளிகளில் மாநாடு குறித்த செய்திகள் திரையிடப்பட்டன. இதனால் செய்தி பரவலை அரசால் தடுக்க முடியவில்லை. அத்துடன் உலக நாடுகளில் இருந்து வந்த தமிழ் அறிஞர்களை விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பியது அரசு. சர்வதேச தமிழ் அறிஞர்கள் திருப்பி அனுப்பப்பட்ட செய்திகள் இலங்கை அரசின் ஜனநாயக மறுப்புக் கோர முகத்தை உலகிற்கு அம்பலம் செய்தது.

இலங்கை அரசின் அடக்குமுறைகளைத் தாண்டி, மாநாடு தனியாகம் அடிகளாரால் வைபவ ரீதியாக தொடங்கப்பட்டது. இதற்காக அவர் பல அச்சுறுத்தல்களை, சவால்களை எதிர்கொண்டார். மாநாட்டு அமர்வுகள் வீரசிங்கம் மண்டபத்திலும், றிமர் மண்டத்திலும் நடக்க, கலை நிகழ்ச்சிகள் யாழ் திறந்தவெளி அரங்கிலும் நடைபெற்றன. யாழ் சுண்டுக்குளி மகளீர் கல்லூரியில் தமிழர் பண்பாட்டுக் கண்காட்சி இடம்பெற்றது. ஆறு நாட்களாக யாழ்ப்பாணமே தமிழ் மொழிப்பண்பாட்டுக் கோலத்தில் மிளிர்ந்தது. மக்கள் எழுச்சியாய் திரண்டனர். இதனை கண்ணுற்ற சிங்கள அரசுக்கு பொறுத்துக் கொள்ள இயலவில்லை.




தமிழ் கிராமங்கள் எங்கும் தமிழ் பண்பாட்டை வலியுறுத்தும் அலங்கார ஊர்திப் பவனிகள் இடம்பெற்றன. இறுதிநாளன்று முத்திரைச் சந்தியை கடந்து வந்த ஊர்தி பவனியை இலங்கை காவல்துறையினர் மறித்தபோது அந்த இடத்திலேயே அமர்ந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை கண்ணுற்ற பொலிஸார் போராட்டத்திற்குப் பணிந்தனர். தம்மால் தடுக்கப்பட்ட இளைஞர், யுவதிகளின் அலங்கார ஊர்திப் பவனியை செல்ல அனுமதித்தனர். எனினும் அதற்கான பலி வாழங்கலுக்காக காத்திருந்தனர்.

இந்த நிலையில் மாநாட்டில் கலந்து கொண்ட சர்வசேத அறிஞர்களை வழி அனுப்பும் நிகழ்வு ஜனவரி 10 அன்று யாழ் திறந்தவெளி அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வை நடத்த அல்பிரட் துரையப்பா அவர்கள் மறுத்தமை காரணமாக யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது. வழியனுப்ப சுமார் 50ஆயிரம் பேர் வந்திருந்தனர். மண்டபம் நிரம்பிய நிலையில் வெளியிலும் மக்கள் திரண்டு இருந்தனர். பாதையை விட்டு வெளியில் புல் தரையிலிருந்து மக்கள் நிகழ்வை பார்வையிட்டனர். பாதைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

இந்த நேரத்தில்தான் அங்கு வந்த ஸ்ரீலங்காப் பொலிஸார் ஏற்கனவே திட்டமிட்டபடி வன்முறையை கட்டவிழ்த்து விட்டனர். தம்மை புறக்கணித்தமை மற்றும் தமிழ் நிலத்தின் பண்பாட்டு எழுச்சி கண்டு சிங்கள அரசு பெரும் இனவெறியில் இருந்தது. இதனால் இந்த நிகழ்வில் எப்படியாவது வன்முறையை தோற்றுவிப்பதற்காகவே அனுராதபுரத்திலிருந்து கலகம் அடக்கும் பொலிஸார் என்ற வன்முறைக் குழு கொண்டுவரப்பட்டது. இந்த நிலையில்தான் யாழ். காவல்துறை அதிபர் சந்திரசேகர தலைமையில் மாநாட்டிற்கு வந்திருந்த அப்பாவிப் பொதுமக்களை பொலிஸார் கடுமையாக தாக்கினர்.


குண்டாந்தடியடிப் பிரயோகம், அளவற்ற கண்ணீர் குண்டுப் புகைப்பிரயோகம் என்பன நிகழ்த்தப்பட்டதுடன், துப்பாக்கிப் பிரயோகங்களும் நிகழ்த்தப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகங்களால் மின்கம்பிகள் அறுந்து வீழ்ந்தன. குறி பார்த்துச் சுட்ட மின் கம்பிகள் வீழ்ந்ததில் ஒன்பதுபேர் அந்த இடத்திலேயே படுகொலை செய்யப்பட்டனர். பெண்களும் வயது முதிர்ந்தவர்களுமாக பல நூற்றுக் கணக்கானவர்கள் நெரிசலில் சிக்கி காயமுற்றனர். அலை கடலென மக்கள் திரண்டு மாநாட்டிற்காக விழாக்கோலம் பூண்ட யாழ் நகரம் அழுகுரலும் கண்ணீருமாய் காட்சி அளித்தது.

இந்த வன்முறைகள் உலக அளவில் இலங்கை அரசின் கொடிய இன ஒடுக்கல் முகத்தை அம்பலம் செய்தது. இதனால் விசாரணை குழு ஒன்றை அரசு அமைத்தது. ஆனால் ஸ்ரீலங்கா பொலிஸார் தண்டிக்கப்படவில்லை. அவர்கள் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவும் இல்லை. தமிழ் மக்களுக்கு இடம்பெறும் அநீதிகளுக்கு சம்பிரதாயபூர்வ விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு நீதி மறுக்கப்படுவது போல தமிழாராய்ச்சி மாநாட்டுப்படுகொலைகளுக்கும் நீதி மறுக்கப்பட்டது. ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சங்களின் மனதில் ஆறாத வடுவாக இந்தப் படுகொலை நிலைத்தது.

1974ம் ஆண்டு தை மாதம் ஒரு கறுப்பு மாதமானது. அந்த வருடம் எவருடைய வீட்டிலும் பொங்கல் இடம்பெறவில்லையாம். தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் மூலம், சிங்கள இன வெறி அரசு தமிழ் மக்களை அவர்களின் மொழி சார்ந்த ஒரு பாரம்பரிய நிகழ்வொன்றை நடத்த அனுமதியாது என்ற கோர ஒடுக்குமுறை குணாம்சத்தை உலகிற்கு எடுத்துக் கூறியது. இலங்கை அரசு தமிழ் மக்களை அரசியல் ரீதியாக ஒடுக்குவதற்கும் அப்பால், மொழி, பண்பாட்டு ரீதியாகவும் தீவிரமாக ஒடுக்குகிறது என்பதை இந்த நிகழ்வு உணர்த்தியது. பிற்காலத்தில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான பின்னணிக் காரணங்களில் ஒன்றாக இப் படுகொலை குறித்த வடுவும் இடம் பெற்றது.

■ ■ ■

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடு: வரலாற்று நோக்கு:




உலகத் தமிழாராய்ச்சி மாநாடு உலகெங்கும் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கவும் வாழ்வையும் வரலாற்றையும் ஆவணமாக்கிச் செல்லும் பணிகளையும் முதன்மையாகக் கொண்டது எனலாம். 1964ம் ஆண்டு, தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியில் புதுடெல்கியில் இந்த மாநாடு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மன்றத்தின் தொடக்கம் குறித்து உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இணையத்தளம் பின்வருமாறு கூறுகின்றது.

### உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தொடக்கம்:

18-ம் நூற்றாண்டு முதலே ஐரோப்பியர்களின் கவனமும் நடவடிக்கைகளும் கல்கத்தா பற்றியே இருந்ததால் தமிழ்நாடு பற்றிய உணர்வு அவர்களுக்குத் தோன்றவே இல்லை. மேலும் தனித்த பெருமை கொண்டது மட்டுமல்லாமல் சமஸ்கிருதத்தையும் சிறப்பித்த தமிழ்மொழி, ஆரிய-திராவிட நாகரிகங்களின் இணைப்புப் பாலமாக இருந்ததனை அறியாமல் இந்தி, வங்காளம், பஞ்சாபி, மராத்தி போன்ற மாகாண மொழிகளுள் ஒன்று மட்டுமே என்று தான் பிறநாட்டு மொழி ஆராய்ச்சியாளர் தவறாகக் கருதிக்கொண்டிருந்தனர்.

உலக நாடுகளில் உள்ள அனைத்து அறிஞர்களும் ஒன்று கூட வேண்டும் என்ற நோக்கில் கீழை நாடுகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட அறிஞர் பெருமக்கள் பலரும் இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை கூடி புதிய ஆய்வுகள் பற்றிய சிந்தனைகளைப் பரிமாறிக் கொண்டனர். இவ்வமைப்பு கீழைநாட்டாய்வாளர்களின் பன்னாட்டு ஒன்றியம் என்ற பெயரில் நடைபெற்று வந்தது. இதிலும் தமிழ்மொழி பற்றிய ஆய்வு மிகக் குறைவாகவே இடம்பெற்றது.

இத்தகு குறைபாடுகளைப் போக்கி தமிழ் மொழிக்கு உலகளாவிய அளவில் உலகக் கவனிப்பை உருவாக்க வேண்டுமென்று தமிழ் அறிஞர்கள் முனைந்தனர். இதனை ஏற்று நடத்த ஓர் அமைப்புத் தேவையென்பதை அவர்கள் உணர்ந்தனர். இதன் விளைவாக 7.1.1964-ல் புதுதில்லியில் கீழ்த்திசையறிஞர்களின் மாநாடு கூடிய போது தவத்திரு தனிநாயகம் அடிகளார் ‘உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்’ என்ற ஒன்றினை திருவாளர்கள் ஏ. சுப்பையா, பிலியோசர், பர்ரோ, எமனோ, கூப்பர், சுவலெபில் போன்றோர் உதவியுடன் கீழ்க்காணும் நோக்கங்களுடன் தொடங்கினார்.

உலகம் முழுவதும் தமிழ் ஆய்வை மேற்கொண்டு, சிதறிக் கிடக்கின்ற சிறு நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துதல், தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பொதுவானவற்றைப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல், பிறநாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழைப் பாடமாக அமைத்தல், அப்பல்கலைக்கழகப் பேராசிரியர்களைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடச் செய்தல், தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழிலக்கியம், தமிழ்ச் சமுதாயம் ஆகியவற்றைப் பற்றி பல்கலைக்கழகத் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் செயல்பட இம்மன்றம் தொடங்கப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி மன்றம் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத் தமிழ் மாநாடு நடத்த வேண்டுமென்று வரையறுத்துக் கொண்டது.

தொடர்ச்சியாக நடைபெற்ற மாநாடுகள் பற்றிய செய்திகளை விக்கிப்பீடியா இணையத்தளம் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

### வரலாறு:

1964 ஜனவரியின் ஆரம்பத்தில் புதுதில்லியில் நடந்த 26வது அகில உலகக் கீழைத்தேயக் கல்வி ஆய்வாளர் மாநாட்டின் போதுதான் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாகியது. தமிழ், திராவிட ஆய்வுகளில் ஈடுபாடுள்ளவரும் மாநாட்டிற் கலந்து கொண்டவர்களுமான இருபத்தாறு பேர், பேராசிரியர் தனிநாயக அடிகளாரும் பேராசிரியர் வ.ஐ. சுப்பிரமணியமும் விடுத்த அழைப்பினை ஏற்றுச் ஜனவரி 7ம் நாள் உத்தியோகப் பற்றற்ற முறையிலே புதுதில்லியில் கூடி அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினை தோற்றுவித்தனர்.

### முதல் மாநாடு:

தனிநாயக அடிகளார் அப்பொழுது (1961-1970) மலேசியப் பல்கலைக்கழகத்திலே இந்தியக் கல்வியாய்வுகள் துறையிலே தலைமை வகுத்துக் கொண்டிருந்தார். அவர் ஏற்கனவே தனது ‘தமிழ் கல்ச்சர்’ எனும் இதழ் மூலம் உலகம் முழுவதிலுமுள்ள தமிழ், திராவிட ஆர்வலரை ஒன்றுசேர்க்க முற்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டவர். அவர் மலேசிய அரசு தமிழ்ச் சமூகத்திற்கு அளித்த ஆதரவின் துணையோடு பிரம்மாண்டமான முறையிலே முதல் மாநாடு கோலாலம்பூரிலே 1966 ஏப்ரல் 16-23 தேதிகளில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் அன்று தமிழியல் ஆய்வில் பங்கெடுத்த பல்லின ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர்.

### இரண்டாம் மாநாடு:

1967ல் சி.என். அண்ணாத்துரை தலைமையிலான திமுக வெற்றிபெற்றுத் தமிழ் நாட்டிலே அரசமைத்தது. எம். பக்தவத்சலம் முன்பு கோலாலம்பூரிலே விடுத்த அழைப்பினை ஏற்றுச் சென்னையிலே திமுக இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்த முன் வந்தது. அது 1968ம் ஆண்டு சனவரி 3-10ம் நாட்களில் சென்னையிலே நடந்தது. அதேகாலத்திலே ‘பூம்புகார்’ பொதுமக்கள் விழாவும் முக்கியத்துவம் பெற்றது.

### மூன்றாவது மாநாடு:

பேராசிரியர் ஜீன் பிலியோசா பாரிசிலே மூன்றாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை 1970இலே நடத்தினார். முன்னைய இரு மாநாடுகளுக்கும் பாரீசு மாநாட்டிற்கும் பெரும் வித்தியாசம். சலசலப்பின்றி வழமை போல் நடைபெறும் கருத்தரங்கு போன்று அது அமைந்திருந்தது. இம்மாநாடு 1970 சனவரி 15-18 காலப்பகுதியில் நடைபெற்றது. இம்மூன்று மாநாடுகளும் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை திட்டமிட்டபடி நடைபெற்றன.

### நான்காவது மாநாடு:

1972 இலே நான்காவது மாநாடு இலங்கையிலே நடைபெற வேண்டியிருந்தது. ஆனாலும் 1970ம் ஆண்டில் ஐக்கிய முன்னணி என்ற சோசலிசக் கூட்டணி அரசு ஆட்சியமைத்த போது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மீண்டும் தழைத்து அரச ஆசிகளோடு வலம் வந்து கொண்டிருந்தவர்களை முகாமைச் சபையிலே சேர்த்துத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்த முடிவு கட்டினர். ஆனால் அத்திட்டம் தடம் புரண்டு போயிற்று. அரசு சார்பு பிரதிநிதிகள் கொழும்பில் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டனர். ஆனாலும் அரசின் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையிலான குழு தீர்மானித்து அதன் படி 1974 சனவரி 3-9 காலப்பகுதியில் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாக நடத்தியது. மாநாடும் கருத்தரங்குகளும் நிறைவேறிய மறுநாள், சனவரி 10ம் நாள், பரிசளிப்பும் விருந்தினருக்கு உபசாரமும் செய்ய ஒழுங்கான பொதுக்கூட்டத்தில் காவல்துறையினரும் குண்டர்களும் பொதுமக்களைத் தாக்கியதில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

### 5 வது முதல் 8 வது மாநாடு வரை:

முதலில் நடைபெற்ற 4 மாநாடுகள் தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் நடைபெற்றவை. அவரது மறைவுக்குப் பிறகு, 5-வது மாநாட்டைத் தொடர்ந்து நடத்தப் போதிய வசதியில்லாமல் மன்றத்தின் வேகம் குறையைத் தொடங்கியது. பிற நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வரும் தமிழறிஞர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாததே இதற்குக் காரணமாகத் தெரிகிறது.

ஐந்தாவது மாநாடு 7 ஆண்டுகளுக்குப் பிறகு 1981-ம் ஆண்டு சனவரி 4-10ல் மதுரையில் நடத்தப் பெற்றது. பின்னர் கோலாலம்பூரில் 6-வது மாநாடு 1987 நவம்பர் 15-19லும், ஆப்பிரிக்காவில் மொரிசீயசில் 7-வது மாநாடு 1989 டிசம்பர் 1-8லும், எட்டாவது மாநாடு தஞ்சாவூரில் 1995 சனவரி 1-5லும் நடத்தப்பெற்றன.

### ஒன்பதாவது மாநாடு:

எட்டாவது மாநாடு இடம்பெற்று 14 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில் ஒன்பதாவது மாநாடு பெப்ரவரி 2010ல் கோவையில் நடத்தப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி சென்னை தலைமைச்செயலகத்தில் 2009 செப்டம்பர் 17ம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் அறிவித்தார். பின்னர் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தப் போதிய கால அவகாசம் இல்லை என்று கூறி உலகத் தமிழாராய்ச்சி மன்றம் ஒப்புதல் தர மறுத்து விட்டது. இதனால் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்று பெயர் மாற்றப்பட்ட ஒரு மாநாடு 2010 சூலையில் கோவையில் நடைபெற்றது.

அதிகாரபூர்வமான 9-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2015 சனவரி 29 முதல் பிப்ரவரி 1 வரை மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது. கோலாலம்பூரில் உள்ள மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை ஆகியவை கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. இம்மாநாட்டுக்கான கருப்பொருள் ‘உலகமயக் காலகட்டத்தில் தமிழாய்வுக்கு வளம் சேர்த்தல்’ என்பதாகும்.

### 10வது மாநாடு:

பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2019 சூலை 3 முதல் 7 வரை ஐக்கிய அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை, சிகாகோ தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து இம்மாநாட்டை நடத்தவிருக்கின்றது.

உலகளாவிய தமிழர்களை இணைத்து பல அரிய பணிகளை ஆற்றவல்ல இம்மன்றம் தொடர்ந்து வலிமையாக இயங்குவதில் பல பொருளாதார, அரசியல் சிக்கல்களைச் சந்தித்து வந்துள்ளது. அவை யாவும் களையப்பட்டு, இது வலுவான மன்றமாக இயங்குமானால் உலகத் தமிழர்களின் இருப்பு தொடர்பில் அரிய பணிகளை ஆற்ற முடியும்.

**தொகுப்பு: தாய்வீடு**

■ ■ ■

# ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வும் தமிழின் தொன்மையும்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ் -

தொல்காப்பியம் என்னும் தமிழின் தொன்மை இலக்கணத்தை, இலக்கியத்தை எமக்குக் காத்து அளித்தவர் எவராக இருந்தாலும் அவருக்கு முதற்கண் எமது வணக்கம். தொல்காப்பியமும் சங்கத் தமிழ் தொகை நூல்களும் இல்லையானால் தமிழும், வரலாற்றுப் பழமையும் பெருமையும் அற்ற ஒரு சாதாரண மொழியாகவே உலக அரங்கில் கணிக்கப்பட்டிருக்கும்.

தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழின் தொன்மை இவற்றை உலகிற்கு எடுத்துக் கூறும் முதன்மைச் சான்றுகள் தொல்காப்பியமும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்கத் தொகை இலக்கியங்களுமே ஆகும். ஆனால், இவை கூறிநிற்கும் உயரிய, பண்பாட்டை உறுதிப்படுத்தக் கூடிய புறச்சான்றுகளான கல்வெட்டு, நாணயம், வெளிநாட்டார் குறிப்புக்கள், அகழ்வாய்வுச் சான்றுகள் எதுவும் அற்ற நிலையில் இவை யாவும் வெறும் இலக்கியங்களே. தமிழ்நாட்டில் முதல் முதலாகக் காலத்தால் அழியாத பாறைக் கற்களால் கோவில் கட்டும் மரபு பல்லவர் காலத்தில் தான் தொடங்கியது.

புதையுண்ட தமிழர் வரலாற்றை அகழ்ந்தெடுக்கும் முயற்சி பொருளாதார, அரசியல் காரணங்களால் தடைப்பட வாய்ப்புண்டு. இவற்றைத் தாண்டிய நிலையில் தமிழர் தொன்மையை அகழ்வாய்வு மூலம் நிலை நாட்டுவது எத்துணை சாத்தியமானது என்பது ஆய்வுச் சிக்கலாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மிக உன்னதமானதொரு பண்பாட்டிற்குச் சொந்தக்காரராக வாழ்ந்தனர் என்று தொல்காப்பியம், சங்கத் தொகை நூல்கள் தரும் தகவல்களை அகழ்வாய்வுச் சான்றுகள் துணையுடன் உறுதி செய்வது, காலம் தாழ்ந்தும் நடக்கும் என்பது எனது கருதுகோளாகும்.

### ஆய்வுக்குத் துணையானவை:

- தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள்.
- ஆதிச்சநல்லூர் தொடர்பான அறிக்கைகள், கட்டுரைகள்.
- முனைவர். கே. ராஜன், திரு. ஐராவதம் மகாதேவன், மற்றும் இவர்கள் போன்ற அகழாய்வாளர்கள் எழுதிய ஆங்கில, தமிழ் நூல்கள்.

### காலம் - கீழ் எல்லை:

- தொல்காப்பியம் - கீழ் எல்லை, கி.மு. 711.
- சங்க இலக்கியங்கள் - கி.மு. 3 முதல் 1ம் நூற்றாண்டு.
- ஆதிச்சநல்லூர் - கீழ் எல்லை கி.மு. 905.

### ஆய்வியல் அணுகுமுறை:

பொருளாதாரம், சமூகம், அரசியல் அடிப்படையில் ஆராயப்படும்.

*'வரப்புயர நீர் உயரும்*
*நீர் உயர நெல் உயரும்*
*நெல் உயரக் குடி உயரும்*
*குடி உயரக் கோல் உயரும்*
*கோல் உயரக் கோன் உயர்வான்'*

என்னும் ஔவையார் பாடலை ஞாபகப் படுத்திக் கொள்ளலாம். ஒரு நாட்டின், நாட்டு மக்களின், அவர்கள் பண்பாட்டின், அரசின், உயர்வு அந்நாட்டின் பொருளாதாரத்தில் பெருமளவில் தங்கி இருக்கிறது என்பதை இப் பாடல் காட்டி நிற்கிறது.

### தொல்காப்பியர் காலப் பொருளாதாரம்:

அரச வருமானம், வணிக வருமானம், பொதுமக்கள் செய் தொழில் வருமானம் என்னும் முப்பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

**அரசவருமானம்:**
அரச வருமானம், வாணிபம், சுங்கவரி முதலிய வரிகள், திறை, வென்ற நாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் செல்வம் முதலியவற்றை உள்ளடக்கும்.

**வாணிபம்:**
வாணிபத்தை உள்நாட்டு வாணிபம், வெளிநாட்டு வாணிபம் என இரண்டாகப் பிரிக்கலாம்.

**உள்நாட்டு வாணிபம்:**
வேளாண்மை, தோட்டப்பயிர்ச் செய்கை, கயிறு திரித்தல், கூடை பின்னல் முதலிய குடிசைக் கைத்தொழிலுடன் முத்துக் குளித்தல், மீன்பிடித்தல், தச்சுத் தொழில் முதலிய பிற தொழில்களிலும் குடிமக்கள் ஈடுபட்டிருந்தனர். உலோகத் தொழிலில் ஊதுகுழல், துருட்டி (துருத்தி) முதலியவற்றின் மூலம் நெருப்பேற்றி இரும்பை உருக்கினார்கள். உலோக வேலையாளர்களின் தேவை அதிகமாக இருந்ததாகத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் பதிவு செய்கின்றன. நெசவுத் தொழில், உப்பு வணிகம், மண்பாண்டங்கள் செய்தல், அணிகலன்கள் செய்தல் - சங்கு பண்படுத்துதல், அணிகலன்கள் செய்வதற்கான கற்களை வெட்டுதல், போரில் பயன்படும் தோல் உறைகள் தைத்தல், கருப்பட்டி காச்சுதல், கப்பல் கட்டுதல், சிற்பம் வடித்தல் போன்ற ஏராளமான தொழில்கள் நடைபெற்றதற்குத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. இவை ஒவ்வொன்று பற்றியும் இவ் இலக்கியங்களும் தரும் தகவல்களை விவரிப்பது இந்த ஆய்வின் நோக்கமல்ல.

தொழிற்கூடங்கள் பத்துப்பாட்டு இலக்கியம், பல தொழில்களையும் அத்தொழில் செய்வதற்குரிய கருவிகளையும் பற்றிக் கூறுவதை ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது பலதரப்பட்ட தொழிற்சாலைகள் சங்ககாலத்தில் செயற்பட்டு வந்திருக்கின்றன என்று அனுமானிக்கக் கூடியதாக உள்ளது.

**தச்சுத் தொழிற்சாலை:**
சங்ககால மன்னர்களின் நாற்படைகளில் தேர்ப்படையும் ஒன்று. தெருவில் தேர் உருட்டி விளையாடும் தலைவியின் மகன் பற்றியும் இரவுக்குறியில் வந்து செல்லும் தலைவனின் தேர்ச் சக்கரங்களின் அடையாளம் பற்றியும் தொல்காப்பியம் கூறுகிறது. யானைத் தந்தத்தால் மிக நுண்மையாகச் செய்யப்பட்ட கட்டில் பற்றி நெடுநல்வாடை கூறுகிறது.

**உலோகத் தொழிற்சாலை:**
சங்க கால இறுதிவரையும் தமிழ் மன்னர்களிடையே நடந்த போர் பற்றியே சங்ககாலப் புறத்திணை இலக்கியங்கள் பேசுகின்றன. ஆயுதச்சாலைகள் புறநானூற்றில் அதிகம் பேசப்படுகிறன. வாள், வில், வேல், ஈட்டி, சூலம், கேடயம் எனப் போருக்குத் தேவையான ஆயுதங்கள் செய்வதும் போரில் பழுதுபட்ட ஆயுதங்களைத் திருத்தி அமைப்பதும் என்று கொல்லர் பட்டறை இடையறாது வேலையில் ஈடுபட்டிருந்திருக்கிறது.

**நெசவுத் தொழிற்சாலை:**
மிக உயர்ந்த தரமான பட்டு ஆடைகள் பற்றிச் சங்க இலக்கியங்கள், 'அரவுரியன்ன அறுவை', 'மாசில் காம்பு சொலித்தன்ன அறுவை', 'ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்' என்று பலப்படப் பேசுவதுடன் பல விதமான ஆடைகள் பற்றியும் கூறுகின்றன. கஞ்சியிட்டுச் சலவை செய்த துகிலை அரசன் அணிந்திருந்தான் என மதுரைக் காஞ்சி (அடி 721) கூறுகிறது. இவை தவிர கூடாரம் அமைக்கத்தக்க முரட்டுத் துணிகளும் பாவனையில் இருந்திருக்கின்றன. இத்தகைய உடைகளை உற்பத்தி செய்வதற்கான ஆலைகள் நிச்சயமாக இருந்திருக்கவேண்டும் எனலாம்.

வடநாட்டுடனான வணிகத்தை அகநானூறு பதிவு செய்திருக்கிறது. மகத நாட்டை நந்தர்கள் ஆண்ட காலம் முதலாக தமிழர் வடநாட்டுடன் வணிபத் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார்கள்

**சுங்கவரி:**
வண்டிகள் செல்வதற்கு ஏற்ற நெடுஞ்சாலைகளை அமைத்து வாணிபப் பொருட்களின் பாதுகாப்பிற்காகப் பெருவழிகளில் மட்டுமல்லாமல் கவர் வழிகளிலும் விற்படை வீரர்களை நிறுத்திக் காவல் காத்தமையைப் பெரும்பாணாற்றுப்படை பதிவு செய்கிறது. நெடுந் தெருக்களில் செல்லும் வணிகப் பொருட்களுக்கு உல்கு (வரி) வசூலிக்கப்பட்டது. வரி வசூலிக்கும் சுங்கச்சாவடிகள் பற்றி மதுரைக்காஞ்சி (அடி 621-623) கூறுகிறது.

**கடல் வாணிபம்:**
கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர் கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். இதற்குக் காரணங்களாக, தென்னிந்தியா பூகோள முக்கியத்துவம் பெற்ற மத்திய இடத்தில் அமைந்திருந்தமை, முசிறி, கொற்கை, எயிற்பட்டினம், பட்டினம் (மாமல்லபுரம்), காவிரிப்பூம்பட்டினம் முதலிய வாய்ப்பான துறைமுகங்களைக் கொண்டிருந்தமை, இரும்பு, செம்பு, வெள்ளி, பொன் முதலிய உலோகப் பொருட்கள் பெருமளவில் கிடைத்தமை முதலியவற்றைக் கூறலாம். பெரிப்புளூஸ், பிளினி, தாலமி போன்ற மேனாட்டு யாத்திகர் குறிப்புக்களையும் இவற்றிற்குச் சான்றாகக் கூறலாம்.

'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை' என்னும் தொல்காப்பிய நூற்பா (அகத். 37)தொல்காப்பியர் காலத்தில் கடல் பயணம் நடந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது. பட்டினத்தில் மேலை நாட்டுக் குதிரைகளும் வடநாட்டுப் பொருட்களும் வந்து இறங்கியதை

*'நீர்பெயற்று எல்லைப் போகி பாற்கேழ்,*
*வாலுளைப் புரவியொடு வடவளம் தரு*
*உம்,*
*நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை'*

எனப் பெரும்பாணாற்றுப்படை (அடி319-323) கூறுகின்றது.

கொற்கையிலிருந்து வெண்உப்பு, புளி, உப்பிட்டு உலர்த்திய மீன், பேரணிகலன்கள் முதலியவை ஏற்றுமதி செய்யப்பட்டதையும் குதிரைகள், யவனர் நாட்டுப் பாவை விளக்குகள், மது வகைகள் முதலியன இறக்குமதி செய்யப்பட்டதையும் மதுரைக்காஞ்சி (அடி 315-323)பதிவு செய்திருக்கிறது.

*'முழங்கு கடல் தந்த விளங்கு கதிர்*
*- முத்தம்,*
*... நனந்தலைத் தேஎத்து நன்கலன்*
*- உய்மார்*
*புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொடு*
*- அனைத்தும்'*

காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி மிகப் பெரிய அளவில் நடைபெற்றிருக்கிறது. பெரிய பண்டகசாலைகள் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு பொதிமீதும் சோழரின் புலி முத்திரை பொறிக்கப்பட்டது. குதிரைகள் பெரும் எண்ணிக்கையில் இறக்குமதியாயின. இங்கு, சேரநாட்டு மிளகும், பாண்டி நாட்டு முத்தும், குடகுமலைச் சந்தனக் கட்டைகளும் அகிற் கட்டைகளும், வடநாட்டிலிருந்து மாணிக்கக் கற்களும் சாம்பூநதம் என்னும் பொன்னும், கங்கையிலிருந்தும் கடாரத்திலிருந்தும் அவரவர் நாட்டுப் பொருட்களும், கீழைத் தேசங்களிலிருந்து பவழமும், ஈழத்திலிருந்து உணவு வகைகளும், சீனாவிலிருந்து கருப்பூரம், குங்குமம் முதலியனவும் இறக்குமதியானதை 'நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்... ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்' எனப் பட்டினப்பாலை (185-191) பதிவு செய்திருக்கிறது.

வற்றாத காவிரியையும் வளம் குன்றா வயல்வெளிகளையும் பட்டினப்பாலை (5-6) வியந்து பாடுகிறது.

*'மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப்*
*புலம்பெயர் மாக்கள் கலந்தினிது*
*- உறையும்*
*முட்டாச் சிறப்பின் பட்டினம்'*

என்று பட்டினப்பாலை (அடி 216-218) பல மொழிபேசும் பல்லின வணிகர்கள் பல நாடுகளிலிருந்தும் வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறி இன்புற்று வாழ்ந்ததைப் பற்றிப் பேசுவதைப் பதிவு செய்வோம்.

**மக்கள் செய் தொழில் வருமானம்:**
ஐநில மக்களும் தத்தம் நிலத்தின் தன்மை, காலநிலை முதலியவற்றிற்கு ஏற்ற வகையில் தொழில் செய்து பண்டமாற்று முறையில் கொள்வனவு கொடுப்பனவு வைத்து வாழ்ந்தனர். மருதநில மக்கள் பயிர்ச் செய்கையிலும் முல்லைநில மக்கள் கால்நடை வளர்ப்பிலும் நெய்தல்நில மக்கள் மீன் பிடித் தொழிலிலும் உப்பு உற்பத்தியிலும் ஈடுபட்டிருந்தனர்.

### தொல்காப்பியர் காலச் சமூகம்:

**மக்கள் வாழ்விடங்கள்:**
பண்டைத் தமிழரின் வாழ்விடங்கள் அவற்றின் அளவிற்கேற்ப சிற்றூர், சிறுகுடி, சேரி, ஊர், குடி, பேரூர் என்ற பெயர்களால் வழங்கப்பட்டிருந்தன. இரும்புக்கால ஊர்கள் மூதூர் எனப்பட்டன எனக் கருதக் கிடைக்கிறது. நாடு என்னும் பதத்தை வெகு சாதாரணமாகப் பயன்படுத்தியிருக்கும் முறை, நாடு உருவாகிப் பலகாலமாகிவிட்ட தன்மையைக் குறிக்கிறது.

தொண்டைநாட்டுத் துறைமுகப்பட்டினம் செல்வச் செழிப்புடன் விண்ணைத் தொடும் அழகிய மாடமாளிகைகளைக் கொண்டிருந்தது என்று பெரும்பாணாற்றுப்படையும் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை மாநகரின் மாடமாளிகைகள் பற்றி மதுரைக்காஞ்சியும் காவிரிப்பூம்பட்டினத்துப் பெருமாளிகைகள் பற்றிப் பட்டினப்பாலையும் பாடியிருக்கின்றன. பாண்டிய மன்ன

தொடர்தல் 91ம் பக்கம்

# ஆதிச்சநல்லூர்...

90ம் பக்கத் தொடர்ச்சி...

ரது அரண்மனை பற்றி நெடுநல்வாடையிலும் மன்னனது எழுநிலை மாடம் பற்றி முல்லைப்பாட்டிலும் (அடி 86) பாடப்பட்டிருக்கிறது. சங்ககால கட்டடங்கள் பற்றி ஆயும் வரலாற்று மாணவனுக்கு பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை முதலிய இலக்கியங்கள் கற்பனை கலவாத உண்மையைத் தரவல்லவை. சங்க காலத்துப் பெருநகரங்களில் பெரிய மாடமாளிகைகள் இருந்ததாகச் சங்க இலக்கியங்களால் அறியப்படுகிறது.

**உலோகங்களின் பயன்பாடு:**
சங்ககால மக்கள் இரும்பு, செம்பு, பொன், வெள்ளி முதலிய உலோகங்களின் பயன்பாட்டை அறிந்திருந்தனர். இரும்புத்தொழிற்சாலைகளில் தொழில் புரிவோர், செப்புத் தொழிற்சாலைகளில் செப்பு உருக்கிப் பாத்திரம் செய்வோர் பற்றியும், வாள், வில், கேடயம் முதலிய போர்க்கருவிகள் பற்றியும் அங்குசம், கோடரி முதலிய பிற கருவிகள் பற்றியும் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. செம்பிட்டுச் செய்தது போன்ற உறுதியான சுவர்கள் பற்றி மதுரைக் காஞ்சியும் மதுரைக் கடைகளில் செம்பு நிறுத்து வாங்கப்பட்டது பற்றிப் பெரும்பாணாற்றுப்படையும் (அடி 514) பாண்டியன் அரண்மனைச் சுவர்கள் செம்பிட்டுச் செய்தது போன்று வலிமையானவை என்று நெடுநல்வாடையும் (அடி 112) கூறுகின்றன.

பொன்னாலான அணிகலன்கள் பற்றியும் கலங்கள் பற்றியும் சங்க இலக்கியங்களில் பெரிதும் பேசப்பட்டிருக்கிறது. பெண்கள் காது, மூக்கு, கழுத்து, கை, இடை முதலிய பகுதிகளில் பொன்னாலான அணிகலன்களை அணிவதாகச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. முல்லைப்பாட்டுப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார். வெள்ளியாலான கலங்கள் அரசர், வணிகர் இல்லங்களில் பயன்பாட்டில் இருந்தன.

ஊறுகாய் வைக்கும் மிடா 'காடி வைத்த கலன்' (பெ.ஆ.படை அடி 56-57) என்றும் சோறு சமைக்கும் பாத்திரம் குழிசி என்றும் அப்பம் சுடும் பாத்திரம் சட்டி என்றும் அழைக்கப்பட்டன. பொன்கலம், மலர் வாய்ப் பிழா, குடம், குதிர் முதலிய பல வகையான பாத்திரங்கள் பயன்பாட்டில் இருந்திருக்கின்றன.

அடியோர், வினைவலர், ஏவலர்: 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் கடிவரை இல புறத்து என்மனார் புலவர்' என்றும் 'ஏவல் மரபின் ஏனையோரும் உரியர்' என்றும் முறையே தொல். பொருள். அகத்திணையியல் நூ. 25, 26 கூறுகின்றன.

தொல்காப்பியர் கூறும் 'அடியவர்' யார்? உள்நாட்டவரா வெளிநாட்டவரா? தமிழர் தொன்மையையே கேள்விக்குறியாக்கும் மானிடவியல் கணிப்பாளரின் ஆய்வின் படியான மண்டையோடுகள் பற்றிய ஆய்விற்கு இந்நூற்பா மிகவும் முக்கியமான ஒன்றாகும். தொல்காப்பியர் காலத்தில் (கி.மு. 711 ல்) தமிழ்நாட்டில் அடிமைகள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை பின் தேவைக்காகக் குறித்துக் கொள்ளுவோம். இதனை பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்கள் உறுதி செய்கின்றன.

வினைவலர் என்போர் தொழில்சார் கடமை புரிந்தவர்கள். அரசனுக்கு ஆயுதங்கள் செய்யும் ஆயுதத் தொழிற்கூடங்களில் தொழில் புரிந்த கொல்லர், 'கம்மியர், செம்பு சொரி பானையின் மின்னி எவ்வாயும்' நற்றிணை (153:2-3) கூறும் செப்புத் தொழிற்சாலைகளில் செப்பு உருக்கிப் பாத்திரங்கள் செய்யும் கம்மியர், பருத்தி ஆலைகளில் தொழில்புரியும் நெசவாளர், இவ்வாறு சமூகத்திலிருந்த வினைவலர்களைத் தொல்காப்பியர் அடையாளம் காட்டுகிறார்.

தொழில் முறையால் பெயர் பெற்ற 47 புலவர்கள் சங்கப்பாடல்கள் பாடியிருக்கிறார்கள். பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், கச்சிப்பேட்டு இளந் தச்சனார், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மதுரைக் கணக்காயனார்,

473 புலவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். கிழார் என்னும் பெயர் பெற்ற 35 புலவர்கள் அறியப்படுகிறார்கள். 473 புலவர்களில், தொண்டை நாட்டவர் 9 புலவர்கள், சேர நாட்டவர் 24 புலவர்கள், சோழ நாட்டவர் 55 புலவர்கள், பாண்டிய நாட்டவர் 90 புலவர்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இதனால் சங்க காலத்தில் கிராமங்களும் கல்வியில் மேம்பட்டிருந்தமை அறியப்படுகிறது.

புலவர் பெயர்கள் தமிழ் நாட்டின் அரசியல் சமூக வளர்ச்சிகளை மிகத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. கருவூர், கூடலூர் முதலிய சேர நாட்டின் பகுதிகளையும் ஆர்க்காடு, ஆலங்குடி, ஆவூர், ஐயூர், கடலூர், காவிரிப்பூம்பட்டினம், கிடங்கில், குடவாயில், கொள்ளம், கோவூர், துறையூர், மாங்குடி முதலிய சோழ நாட்டின் பகுதிகளையும் ஒல்லையூர், கடியலூர், மதுரை, பொதும்பில் போன்ற பாண்டிய நாட்டின் பகுதிகளையும் காட்டிநிற்கும் அதே வேளையில் இவ்வூர்கள் தமிழர் வரலாற்றில் பெறும் முக்கியத்துவத்தையும் காணக்கூடியதாக உள்ளது.

சங்ககாலச் சமூகம் சிறப்புற இருந்ததற்கு அக்காலப் பொருளாதாரம் முக்கிய காரணமாக இருந்தது. இறை வழிபாட்டிற்காகவும் அறம் செய்தற் பொருட்டும் விருந்தோம்பலுக்காகவும் பெரியாரைப் பாதுகாத்தற் பொருட்டும் என்று இவ்வாறான நற்காரியங்களுக்காகத் தலைவன் பொருள் ஈட்டச் செல்வதைத் தொல்காப்பியம் தெளிவாகக் கூறுகிறது.

## அரசியல்:

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று தமிழ்நாட்டின் எல்லைகள், தொல்காப்பியப் பாயிரத்தால் வகுக்கப்பட்டுள்ளது. வடக்கே வேங்கடமலை, தெற்கில் குமரிமுனை, கிழக்கிலும் மேற்கிலும் கடல், இவற்றை எல்லைகளாகக் கொண்ட பாரியதொரு நிலப்பரப்பே பண்டைய தமிழ்நாடு. தமிழ்நாடு, சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்னும் முப்பெரும் பிரிவுகளாகச் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன.

அந்துவஞ்சேரல் இரும்பொறை முதலாய 25 சேர மன்னர்களையும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலாய 21 சோழ மன்னர்களையும் அண்டர்மகன் குறுவழுதி முதலாக 25 பாண்டிய மன்னர்களையும் அஞ்சி முதலாய 9 வள்ளல்களையும் அகுதை முதலாய 51 குறுநில மன்னர்களையும் கொங்கர், கோசர், தொண்டையர், பூழியர், மழவர், வேளிர் ஆகிய 7 குடிகளையும் 473 சங்கப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். முடியுடை மூவேந்தர் ஏறக்குறைய சமகாலத்தவராக இருந்திருக்கலாம். மொத்தம் 71 மூவேந்தர் அறியப்படுகிறார்கள். குறுநில மன்னர்களும் வள்ளல்களும் மூவேந்தரின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பில் ஆட்சி செய்திருக்கலாம்.

இப்பாத்திரங்கள் 3000 ஆண்டுகளுக்கு முன் ஆதிச்சநல்லூரில் செய்யப்பட்டவை.



இருங்கோவேள் என்னும் வேளிர் குடி மன்னனைக் கபிலர், 'நாற்பத்தொன்பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்' என்று வாழ்த்தியிருக்கிறார். இதன் மூலம் வேளிர் பரம்பரை ஆகக் குறைந்தது 50 தலைமுறைகளாகத் தமிழ் நாட்டை ஆட்சி செய்திருக்கிறது என்று அறியவருகிறது.

தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் கூறும் அரசர்கள், அரண்மனைகள், மாடங்கள், ஆழ்ந்த அகழிகளால் சூழப்பட்ட மதில்களைக் கொண்ட கோட்டைகள், கடல் வாணிபம், கடல் ஆதிக்கம் இவை போன்ற எண்ணற்ற அரிய பண்பாட்டுத் தகவல்கள், அக்காலப் போர்முறைகள் தானை யானை, குதிரைப் படைகள், படைக்கலங்கள், இவற்றைச் செய்கின்ற வினைவலர், அரசுகட்டு, மணிமுடி முதலியவற்றில் பெரும்பாலானவை அழியக் கூடிய மூலப் பொருட்களாலான காரணத்தாலும் புறச் சான்றுகள் அற்ற நிலையிலும் தமிழ் மொழியின் தொன்மை, தமிழர் அரசியல், சமூகப் பொருளாதார வரலாறு நீண்ட காலமாக இலக்கியத்தால் மட்டுமே அறியப்பட்டது.

## ஆதிச்சநல்லூரின் அமைவிடம்:

தூத்துக்குடி மாவட்டம், தாமிரபரணி நதிக் கரையில் அமைந்திருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் ஆதிச்சநல்லூர். பாண்டிய நாட்டின் தலைநகரான கொற்கை, ஆதிச்சநல்லூரில் இருந்து 15 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூரின் பெருங்கற் காலச் சின்னங்கள் தாழி வகையைச் சேர்ந்தவையாகும்.

## ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு வரலாறு:

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு 1876ம் ஆண்டு முதலாகப் பலகட்டங்களாகப் பலரால் முன்னெடுத்து நடத்தப்பட்டு வந்திருக்கிறது.

- 1876ம் ஆண்டு ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஜாகோர் என்னும் மானிடவியலாளர் ஆதிச்சநல்லூர் பறம்பில் அகழாய்வு செய்து கிடைத்த பொருட்களை பெர்லின் நகருக்கு எடுத்துச் சென்றார்.
- 1906ம் ஆண்டில் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு மேற்கொண்ட அலெக்சாண்டர் ரீ என்பவர், தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கொங்கராயக் குறிச்சி என்ற ஊரே இந்த ஆதிச்சநல்லூர் தாழிக் காட்டு மக்களின் வாழ்விடமாக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். கொங்கராயக் குறிச்சியில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட செங்கல் கட்டுமானம் ஒன்றினைத் தாம் கண்டதாக ரீ தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அகழ்வாய்வில் கிடைத்த பொருட்களில் பெரும்பாலானவை சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டன.
- அடுத்ததாக 1903-1904ல் பிரெஞ்சுத் தொல்லியலாளர் லூயி லூப்பெக்யூ, அகழாய்வில் கிடைத்த பொருட்களைப் பாரிஸ் நகர அருங்காட்சியகத்திற்குக் கொண்டு சென்றார்.
- 2003-2004ம் ஆண்டுகளில் தொல்லியலாளர் சத்தியமூர்த்தி அவர்களின் தலைமையில் அகழ்வாய்வு நடைபெற்று அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் உலோகவியல், மானிடவியல் வல்லுனரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு சில குறிப்பிடத்தக்க முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள், உலோகங்களின் அறிமுகம், குறிப்பாக இரும்பு கி.மு. 1000வது ஆண்டிற்கு முன்னரே அறிமுகமாகி இருக்கிறது. கி.மு. 1500 அளவிலாக இருக்கலாம்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் குறித்த முழுமையான ஆய்வுகள் நடைபெறவில்லை என்றும், எனினும் இந்த முகத் தாடைகள் தென் தமிழக மக்களை விடவும் அவுஸ்திரேலிய மற்றும் ஆபிரிக்கக் கறுப்பு இன மக்களை ஒட்டியதாகக் கூறப்படுகிறது. முக எலும்புகளில் கண் குழிகள் போன்றவை கிழக்கு ஆபிரிக்க மக்களை ஒத்துப்போவதாகவும் அவ்வாறே நெற்றியும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுடன் ஒத்துப் போவதாகவும் சில மானிடவியலாளர் கூறுகின்றனர் என்கிறார் திரு கல்யாணராமன். ஆனால் அவை 3,000 முதல் 4,000 ஆண்டுத் தொன்மையானவை என்பது உறுதி செய்யப்படுகிறது. சிந்து வெளியில் ஆய்வு நடத்திய பலர் அவர்களின் உடல் அமைப்பு ரீதியாக அவர்கள் திராவிட நாகரீகத்தைச் சேர்ந்தவர்கள் என்றனர். ஆனால் ஆதிச்சநல்லூரில் இந்தத் தொடர்பகள் இதுவரை கிடைக்கவில்லை.

## சங்கத் தமிழ் இலக்கியங்களும் அகழாய்வுத் தகவல்களும்:

வெளிநாட்டார் குறிப்புக்கள், சங்கத்தொகை நூல்கள், தமிழகம் எங்கும் பரந்து காணப்படும் பெருங்கற்படைச் சின்னங்கள், அவற்றுடன் தொடர்புடைய வாழ்விட மண்மேடுகள், கற்குகைகள் ஆகியவையும் இக்காலத்திற்குரிய தொல்லியல் சான்றுகளாக அறிஞர்களால் அறியப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் தொல்காப்பியர் காலத்தையும் சங்க இலக்கிய காலத்தையும் இன்று கி.பி. 1 முதல் கி.மு 10ம் நூற்றாண்டு வரை எடுத்துச் செல்கின்ற

தொடர்தல் 92ம் பக்கம்

# ஆதிச்சநல்லூர்...

90ம் பக்கத் தொடர்ச்சி...

னர்.

**பெருங்கற்படைகள்:**
தமிழகத்தில் பெருங்கற்படை எச்சங்கள் உள்ள இடங்கள்.

இப்பெருங்கற்படை எச்சங்கள் காணப்பட்ட இடங்கள் அனைத்தும் மக்கள் வாழ்விடங்களை அண்டியே இருந்திருக்கவேண்டும். அதன்படி தொல்காப்பியர் காலத் தமிழகமாகப் பனம்பாரனால் அடையாளம் காட்டப்பட்ட 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' இதுவாகத்தான் இருக்கவேண்டும். 2015ம் ஆண்டு, பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவரும் அகழ்வாய்வுத் துறை வல்லுனருமான முனைவர் கே.ராஜன் அவர்களை நான் சந்தித்த போது அவர் கூற்றுப்படி பார்த்தால் இன்னும் 90 விழுக்காட்டுக்கு மேலான இடங்கள் ஆய்வுக்கு அணுகப்படாமலே இருக்கின் றன.

'கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் முற்பட்ட பெருங்கற்படைச் சின்னங்களைப் பற்றிய தெளிவான குறிப்புகளைச் சங்கப் பாடல்களில் பார்க்கும் பொழுது இப் பாடல்களின் காலத்தைப் பின்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.' என்கிறார் முனைவர் கே. ராஜன்.

**முதுமக்கள் தாழி:**
முதுமக்கள் தாழி என்று அழைக்கப்படும் ஈமத்தாழிகள் இங்கு பெருமளவில் கண்டெடுக்கப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்ய, தானியங்களைச் சேமிக்கப் பயன்படும் குதிர் என்ற மட்கலனை ஒத்த சுடுமண் கலன்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மறு உலகம் பற்றிய நம்பிக்கை உள்ளவர்களாக இவர்கள் இருந்திருக்கவேண்டும். இறந்த ஆவிகளின் பயன்பாட்டிற்காக உணவு, உடை, ஆயுதங்கள், அணகலன்கள், தொழிற்கருவிகள் முதலியவற்றைத் தாழியில் வைத்து அடக்கம் செய்திருக்கிறார்கள். இவை தவிர மக்கிய துணிகள், மட்பாண்டங்கள், உலோகப்பாத்திரங்கள், அரிசி, வரகு ஆகிய தானியங்களின் உமி, படைக்கலங்கள் என்பனவும் கண்டறியப்பட்டன.

தாழியில் உள்ள எலும்புக் கூடுகள் அமர்ந்த நிலையிலிருப்பதைப் பார்க்கும் போது, உட்காந்த நிலையில் இறந்த வரை அடக்கம் செய்துள்ளனர் என்று அறிய முடிகிறது. இங்கு காணப்பட்ட மண்டை ஓடுகள் சிலவற்றில் ஆழமான குழி காணப் படுகிறது. போரின் போது தலையில் ஏற்பட்ட காயமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

**ஆதிச்சநல்லூர்,**
**மக்கள் வாழ்விடங்கள்:**
பண்டைத் தமிழர் புதைகுழிகள் பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுவனவற்றை ஆதிச்சநல்லூர் புதைகுழிகளில் காண்பது வியப்புக்குரியதே. புதை குழியிலிருந்து எடுக்கப்பட்ட சில பொருட்கள் மணிப்பூர் பல்கலைக்கழகத்தில் உள்ள தெர்மோலுமினிகள் என்ற ஆய்வு மையத்தால் ஆய்வு செய்யப்பட்டு அதன் படி இவ் வாழ்வியல் தளம் கி.மு.500ம் ஆண்டளவில் புழக்கத்தில் இருந்தது என்று கண்டறியப் பட்டது.

தமிழகத்தில் இரும்புத்தாது அதிகம் கிடைத்ததால் இரும்பு உருக்கும் தொழில் நுட்பம் வளர்ந்தது. அதன் பயனாக இரும்புத் தொழிற்சாலைகளும் இரும்பு உற்பத்தியும் பாவனையும் பெருகியது. இரும்புப் பாவனையில் ஏற்பட்ட முன்னேற்றம் மக்கள் பண்பாட்டு வளர்ச்சியையும் துரிதப்படுத்தியது.

முதுமக்கள் தாழிகளும் ஈமப்பேழைகளும் ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கில் கிடைத்தன. ஈமக்காடுகளை அண்மித்தே இப் பண்பாட்டிற்குரிய மக்களின் வாழ்விடங்களும் இருந்திருக்கவேண்டும். இவ் வாழ்விடங்களிலிருந்தும் நினைவுச் சின்னங்களிலிருந்தும் மக்கிய நிலையில் கிடைத்த அரிசி, சோளம், கம்பு முதலிய தானியவகைகள், தொல் பொருட்கள் முதலியவற்றிலிருந்து இவர்கள் ஒரே இடத்தில் நீண்ட காலமாக வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் கொள்ளலாம்.

ஆதிச்சநல்லூரில் கோட்டைச் சுவர் ஒன்று ஆய்வாளர் சத்தியமூர்த்தியின் மேற்பார்வையில் கண்டு பிடிக்கப்பட்டது. இக் கோட்டைச் சுவர் மக்கள் வாழிடம் என்று



இப்பாத்திரங்கள் 3000 ஆண்டுகளுக்கு முன் ஆதிச்சநல்லூரில் செய்யப்பட்டவை.

அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆதிச்சநல்லூரில் இடுகாடு மக்கள் வாழ்விடத்திலிருந்து 100 மீட்டர் அப்பால் வடக்கிலும் வடமேற்கிலும் உள்ள சரிவுகளில் காணப்படுகிறது. இக் கோட்டைச் சுவர் சீரான வடிவத்தில் இருப்பதையும் அக் கோட்டைக் குடியிருப்பில் குயவர்களின் சிறு குடியிருப்பையும் மூன்று பானைச் சூளைகளையும் பானைகள் சுட்ட சாம்பல், கரி, உடைந்த பானை ஓடுகள் முதலியவையும் கண்டறிந்தனர்.

அத்துடன் இரும்புக் கத்தி, பாசி மணிகள், கார்னேலியன் மணிகளும் கோவசுச மணிகளும் பெருங்கற் காலக் குறியீடுகள் கொண்ட பானை ஓடுகளும் எலும்பால் செய்யப்பட்ட கருவிகளும் இப் பகுதியில் கிடைத்தன. இவ் வாழ்விடங்களில் வாழ்ந்த மக்களின் காலமும் ஆதிச்சநல்லூரின் தாழிக் காட்டின் காலமும் ஒன்றாகவே இருக்கவேண்டும்.

## ஆதிச்சநல்லூரில் கிடைத்த தொல்பொருட்கள்:

ஏறத்தாழ 114 ஏக்கர் பரப்பளவில் நடந்த இந்த ஆய்வில் ஏராளமான ஈமத் தாழிகள் கிடைக்கப் பெற்றன. சுட்ட களிமண்ணினால் செய்யப்பட்ட இத் தாழிகள் பாறைகள் நிறைந்த மலைச் சரிவில் குழி தோண்டப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளன. தாழிகள் சில ஒன்றினால் ஒன்று மூடிய நிலையிலும் காணப்பட்டன. எழுத்துக்களுடன் கூடிய தாழிகளும் பண்டைத் தமிழர் எழுத்தறிவுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டி நிற்கிறது. இவ் எழுத்துக்கள் பற்றிய விவாதங்களும் இல்லாமல் இல்லை. தாழியிலுள்ள எழுத்துக்களை கீறல் எழுத்துக்கள் என்று சில ஆய்வாளர்கள் கருதுவர். தமிழரின் முன்னோர்கள் இப் பகுதியில் வாழ்ந்தார்கள் என்பதும் அவர்கள் பண்பாட்டின் தளமாக ஆதிச்சநல்லூரைக் கருதலாம் என்பதும் இவ்வகழ்வாய்வுகளில் வெளிக்கொணரப் பட்டது.

**உலோகப் பொருட்கள்:**
இங்கு, இரும்பு, தங்கம், வெண்கலம், கல் முதலியவற்றால் செய்யப்பட்ட பொருட்கள், வெண்கல சாடிகள், வட்டக் கிண்ணங்கள், இரும்பு வாள், வேல் போன்றவை கிடைத்திருக்கின்றன. 90 வகையான இரும்புப் பொருட்கள் அலெக்சாண்டர் ரீ ஆல் இங்கு கண்டெடுக்கப்பட்டன. இவை தென்னிந்தியாவில் இரும்பின் உபயோகம் மிகவும் தொன்மையானது என்பதைக்காட்டி நிற்கின்றது.

மிகத் தொன்மையான காலத்திலிருந்தே இரும்பைப் பிரித்தெடுத்து அதனைப் பயன்பாட்டுப் பொருட்களாக்கிப் பயன்படுத்துவதில் பண்டைத் தமிழர் கைதேர்ந்தவர்கள் என்று அறிய முடிகிறது. மிகப் பழங் காலத்திலிருந்தே தமிழர் ஆபிரிக்கா, சுமேரியா, கிரீஸ், மெக்சிகோ முதலிய நாடுகளுக்கு இரும்புப் பொருள் ஏற்றுமதி செய்ததாக அறியப்படுகிறது. எகிப்தியரும் கிரேக்கரும் இந்திய நாட்டில் இருந்து தான் இரும்பை உருக்கிப் பயன்படுத்தும் முறைகளை அறிந்தனர் என்று கூறப்படுகிறது. 1937ம் ஆண்டு இராயல் ஏஷியாட்டிக் சொசைட்டியில் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை ஒன்றில் அறிஞர் ஹீத் என்பவர் தென் இந்தியாவில் செய்யப்பட்ட எஃகுப் பொருட்களே எகிப்திற்கும் ஐரோப்பியக் கண்டத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் காட்டியுள்ளார்.

அண்மையில் எகிப்தில் கிடைத்த தமிழ் பிராமி கல்வெட்டிலிருந்து சாத்தன், கண்ணன் என்னும் இரு தமிழர் எகிப்து நாடு சென்று அங்கு கொல்லன் பட்டறை நிறுவி பணி செய்ததாக திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மெக்சிகோ நாட்டிலுள்ள பிரமிட்டுக்கள் கட்டப் பயன்படுத்திய கற்களை செதுக்குவதற்குரிய உளிகள் இப் பட்டறையில் உருவாகியிருக்க வேண்டும். தமிழரது இரும்பு நாகரீகத்தை வெளிப்படுத்தியது ஆதிச்சநல்லூர் தான் என்கின்றனர் அறிஞர்.

வெண்கலத்தால் எருமை, ஆடு, கோழி முதலியவற்றின் உருவங்கள் வார்க்கப் பட்டிருந்தன. எனவே இவற்றை இம் மக்கள் வீட்டில் வளர்த்திருக்கிறார்கள் என்று அனுமானிக்கலாம்.

**கலை:**
வெண்கலத்தால் வடிக்கப்பட்ட எருமை, ஆடு, கோழி முதலியைக் உருவங்கள் இன்னுமொரு செய்தியைக் கூறுகின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் கலை உணர்வு மிக்கவர்கள். உருவங்களை வடிவமைக்கும் அளவுக்கு நாகரீகம் மிக்கவர்களாக இருந்திருக்கிறார்கள்.

**மட்பாத்திரங்கள்:**
இங்கு, கருப்பும் சிவப்பும் கலந்த பானை ஓடுகள், சிவப்பு, கருப்பு ஆகிய வகைப் பானைகள் கிடைத்துள்ளன. ஒரு பானையில் ஒரு பெண், நெற்கதிர்கள், ஒரு மான், ஒரு பல்லி ஆகியவற்றின் உருவங்கள் காணப்பட்டன. மண்ணாலான கிண்ணங்கள், குண்டான்கள், பானைகள், கூசாக்கள், தட்டுகள், வட்டில்கள், தாங்கிகள் முதலியன கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் இங்கு வாழ்ந்த மக்கள் மட்பாண்டங்கள், பானைகள் வனையும் தொழிலில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று அறியக்கிடக்கிறது.

தங்கத்தாலான 23 நெற்றிப்பட்டங்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஈமத்தாழிகளில் கிடைத்த மண்வெட்டி, கொழு, தானியங்களின் உமி, இற்றுப் போன பஞ்சாடை, தங்க நெற்றிப்பட்டம் முதலியவற்றைக் கொண்டு ஆதிச்ச நல்லூரில் வாழ்ந்த மக்கள் வேளாண் தொழிலை மேற்கொண்டிருந்தார்கள் என்பதும் நெசவுத் தொழில், தச்சுத் தொழில், பானை வனையும் தொழில் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினார்கள் என்பதும் தெளிவு.

ஆதிச்சநல்லூரின் வாழ்ந்த மக்கள் போர் வீரர்களாகவும், குதிரைகளின் பயன்பாட்டை நன்கு அறிந்தவர்களாகவும் இரும்பை உருக்கவும் வார்க்கவும் போர்க் கருவிகள் செய்யவும் பழக்கப்பட்டவர்களாகவும் அறியப்படுகிறார்கள்.

சங்க இலக்கியத்தில் ஆதிச்சநல்லூர் பற்றிய எவ்வித குறிப்பும் அறிய முடியாத நிலையில் சங்க காலத்திற்கு முந்திய செழுமையான நாகரீகமாக இந் நாகரீகத்தை மதிப்பிடலாம் என்கிறார் முனைவர் சி. இளங்கோ.

## ஆதிச்சநல்லூர் காலம் கி.மு. 905:

செய்துங்கநல்லூரைச் சேர்ந்த எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராஜ் என்பவர் உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் பொது நல மனு ஒன்று தாக்கல் செய்திருந்தார். அம் மனுவில்,

ஆதிச்சநல்லூரில் இதுவரை 4 கட்ட அகழாய்வு நடைபெற்றுள்ளது. இந்த அகழாய்வு குறித்த அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. இங்கு எடுக்கப்பட்ட பழங்காலப் பொருட்கள் சென்னையிலும் வெளி நாடுகளிலும் உள்ளன. எனவே ஆதிச்சநல்லூரில் மீண்டும் அகழாய்வு நடத்தவும், ஆதிச்சநல்லூர் அகழாய்வு அறிக்கையை வெளியிடவும், அந்த அறிக்கையின் அடிப்படையில் ஆதிச்ச நல்லூரில் அருங்காட்சியகம் அமைத்துப் பழங்காலப் பொருட்களைக் காட்சிப்படுத்தவும் உத்தரவிடவேண்டும்' என்று கூறப்பட்டிருந்தது.

இம் மனுவின் அடிப்படையில் ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிப்பொருட்கள் கார்பன் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

ஏப்ரல் 04, 2019 இவ் வழக்கு நீதிபதிகள் கிருபாகரன், எஸ்.எஸ். சுந்தர் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, கார்பன் சோதனைக்காக புளோரிடாவிற்கு அனுப்பப்பட்ட இரண்டு பொருட்களின் முடிவுகள் வெளிவந்துள்ளதாகவும் ஒரு பொருளின் வயது கி.மு. 905 என்றும் மற்றொன்றின் வயது கி.மு. 791 என்றும் அறிவிக்கப்பட்டது.

இச் செய்தி தமிழர் இருப்பை கி.மு.905ம் ஆண்டிற்கு இட்டுச் செல்கிறது என்பதைக் குறித்துக் கொள்ளலாம்.

ஆதிச்சநல்லூர் தொடர்பான ஆய்வு தொடக்க நிலையிலேயே இன்னும் இருக்கிறது. நாம் ஆய்வதற்கு ஏராளம் தகவல்கள் தேவைப்படுகின்றன. மக்கள் சமூகமாகக் கூடி வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்வாதாரம் விவசாயமாகவும் கொல்லத்தொழில், குயவத் தொழில், நெசவுத் தொழில், ஆபரணம் செய்யும் தொழில் முதலாகப் பல வகையிலும் தம்மைப் பொருளாதாரத்தில் மேம்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இரு சடைப் பின்னலுடனும் முழந்தாள் அளவு பாவாடை அணிந்த மாதிரியாகவும் ஒரு பெண் உருவம் காணப்படுகிறது. சமூக அமைப்பு இருந்திருக்கிறது. பொருளாதாரம் சிறப்பாக இருந்திருக்கிறது. வெளிநாட்டு வணிபம் நடந்திருக்கிறது. இத்தனையும் சிறப்பாக அமைந்த ஒரு நகரத்தில் நிச்சயமாக கட்டமைக்கப்பட்ட ஒரு அரசு இருந்திருக்கவேண்டும். தற்போதுள்ள நிலையில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னைய கால நாகரீகத்தை ஆதிச்சநல்லூர் காட்டிநிற்கிறது. தரவுகள் அதிகம் பெறப் பெற அபிப்பிராயங்களும் மாற்றமடைந்து கொண்டே இருக்கும். தொடர் ஆய்வுதான் பதில் கூறவேண்டும்.



vivekanandan.p@thaiveedu.com

# தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளார்

ஈழத்துத் தமிழறிஞர், கல்வியாளர். தமிழ், ஆங்கிலம் தவிர ஸ்பானியம், உரோம மொழி, போர்த்துகீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் கூடியவரும், பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள நூலகங்களில் பல தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள், மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்து வெளிக் கொணர்ந்தவர் தனிநாயகம் அடிகளார்.

தமிழ்க் கலாசாரம் என்னும் தீன் சுவையை அந்நிய மொழியாகிய ஆங்கில மொழி மூலம் தமிழர்களது கலை, இலக்கியம், பண்பாடு என்பவற்றை உலகிற்கு பறைசாற்றியவர் பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்து பன்மொழிப் புலவராகத் திகழ்ந்த அறிஞர் தனிநாயகம் அடிகளார்.

## பிறப்பு:

சேவியர் தனிநாயகம் அடிகளார் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில், நெடுந்தீவை சேர்ந்த ஹென்றி ஸ்ரனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை - சிசிலியா இராசம்மா பஸ்தியாம்பிள்ளை தம்பதியினரின் மகனாக ஓகஸ்ட் 2, 1913இல் கரம்பொன் என்ற கிராமத்தில் பிறந்தார். தனிநாயக அடிகளின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிசுலாசு என்பதாகும். பிற்காலத்தே இவர் தமிழில் கொண்ட தீராத காதலினால் உரோமன் கத்தோலிக்க குருவாக நியமிக்கப்பட்டபோது தனது பெயரினை சேவியர் எஸ் தனிநாயகம் என்ற தமிழ்ப் பெயரினையும் சேர்த்துக் கொண்டார்.

## கல்வி:

தனிநாயகம் அடிகளார் தொடக்கக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில வழிக் கல்வி பயின்றார். பின்னர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப்பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றார். இக்காலத்தில் ஆங்கிலம், இலத்தின், இத்தாலியம், பிரெஞ்சு, ஜேர்மன், ஸ்ப்பானியம், போத்துக்கீயம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தொடர்ந்து உருசியம், கிரேக்கம், இபுரு, சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்து ஒரு பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

திருவனந்தபுரம் மறைமாவட்டத்தில் பணியாற்றிய போது 1934 தொடக்கம் 1939 வரை உரோமை நகரில் வத்திக்கான் பல்கலைக்கழகம் சென்று The Carthaginian Clergy என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரையினை எழுதி தெய்வ தத்துவத்தில் (Doctor of Divinity) பட்டம் பெற்றார். இவ்வாய்வுக் கட்டுரை 1960ல் நூல் வடிவில் வெளியானது. இங்கு படிக்கும்போதே பன்னாட்டு அறிஞர்களின் தொடர்புகள் இவருக்கு கிடைத்தது.

குருத்துவக் கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்ற பின்பு தென்னிந்தியா திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கன்குளம் என்னும் ஊரில் உள்ள புனித திரேசா மடப் பாடசாலையில் நான்காண்டுகள் துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். முறையான தமிழைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இங்கேயே தோன்றியது. பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயில ஆரம்பித்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுமாணிப் பட்டம் பெற்றார்.



1945ம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவரது தமிழ் அறிவின் ஆழத்தினையும் முதிர்ச்சியினையும் கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் இரத்தினசாமி, மற்றும் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும் எடுத்த முடிவினால் இளமாணிப் படிப்பு முடிக்காமலே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுகலைக் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். 1947 தொடக்கம் 1949 வரை தமிழ் இலக்கியத்தில் சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து, எம்.லிட்.பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத் துறைக்கு இட்டுச்சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டு சென்றது.

## ஆசிரியப் பணி:

1952 தொடக்கம் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் 1955 முதல் 1957 வரை இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து கல்வியியலில் முனைவர் பட்டத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுக்கொண்டார். 1961 முதல் 1968ம் ஆண்டுவரை மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியாராகவும் பணியாற்றினார். இக்காலத்திலேயே பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களும் இங்கு பேராசியரியராகக் கடமையாற்றினார். 1969ல் மலேசியாவை விட்டு நீங்கியவுடன் பாரிஸ் மற்றும் நேப்பிள்ஸ் பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

## இதழியலில் பணி:

தூத்துக்குடியில் பணியாற்றிய காலத்தில் தனிநாயகம் அடிகளார் தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பினை நிறுவி 1952ம் ஆண்டில் Tamil Culture (தமிழ்க் கலாச்சாரம்) என்னும் ஆங்கிலக் காலாண்டு இதழை ஆரம்பித்து தமிழர்களுடைய கலை, இலக்கியம், பண்பாடு என்பவற்றை பறைசாற்றி வந்துள்ளது. கத்தொலிக்க துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் காலப்போக்கில் தமிழ் மீது தீராக் காதல் கொண்டு அதனை முறைப்படி கற்றுத் தேர்ந்து தமிழ் வளர்க்கும் - பரப்பும் தூதரானார். தமிழ்க் கலாசாரம் ஏட்டின் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். இந்த ஏடு ஆற்றிவந்த அரும் பெரும் பணி மிகவும் மகத்தானது. இவ்விதழ் அமெரிக்க, ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் வரை சென்றடைந்த பெருமை தனிநாயகம் அடிகளாரையே சாரும். இதன் காரணமாக தமிழ் கற்கும் வேற்று மொழி இனத்தவர்களான சுவெலபில், பிளியோசற், அந்திரோனொவ், எமனு, குய்ப்பர், நோல்டென், மார், பொக்சர், பறோ ஆகியோர் இவ்விதழில் தொடர்ந்து தமது ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வந்தனர். 1961ல் சென்னையில் 'தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்' (Academy of Tamil Culture) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். முதல் தமிழாராச்சி மகாநாட்டினைத் தொடர்ந்து மலேசியாவிலிருந்து உலகத் தமிழ் ஆய்வு மையத்தின் சார்பாக 'Journal of Tamil Studies' என்னும் ஒரு இதழுக்கான ஆசிரியராகப் பணியாற்றி காலத்தில் பல சிறந்த அறிஞர்களின் கட்டுரைகளை வெளிக் கொணர்ந்தார்.

## உலக நாடுகளுக்குப் பயணம்:

1950களில் தனிநாயகம் அடிகளாரால் லிஸ்பனில் அச்சிடப்பட்ட லூசோ-தமிழ் மறைக்கல்வி (Cartilha) நூல், 1554ம் ஆண்டில் லிஸ்பனில் அச்சிடப்பட்ட லூசோ-தமிழ் மறைக்கல்வி (Cartilha)நூல் கண்டு பிடிக்கப்பட்டது.

தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செழுமையையும் உலகில் பரப்பும் நோக்கோடு ஜப்பான், சிலி, பிரேசில், பெரு, மெக்சிக்கோ, எக்குவடோர், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து ஒரே வருடத்தில் 200க்கும் மேற்பட்ட பேருரைகளை நிகழ்த்தி சாதனை புரிந்தார். இவ்வாறு விரிவுரைகளை நிகழ்த்தும் போது பல நாடுகளிலும் சிறப்பு பேரா சிரியராகத் தமிழ்ப் பாடமும் நடத்தி வந்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்த போது அங்குள்ள நூலகங்களில் பல தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள், மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்தார். இதன் பெறுபேறாக 1556ம் ஆண்டில் தமிழில் அச்சிடப்பெற்ற Luso-Tamil Catechism (போர்த்துக்கீச-தமிழ்மொழியில் கிறித்தவம் சார்ந்த கேள்விக் கொத்து) 'காட்டில்கா' (Cartilha)

தொடர்தல் 94ம் பக்கம்

# தமிழ்ப் பேரறிஞர்...

93ம் பக்கத் தொடர்ச்சி...

எனப் பெயரிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதனை அடிகளார் 1950ம் ஆண்டில் லிஸ்பனில் கண்டெடுத்தார். அத்துடன், 1578ல் அச்சிடப்பெற்ற தம்பிரான் வணக்கம் (Thambiran Vanakkam), 1579ல் வெளியிடப்பட்ட 'கிறித்தியானி வணக்கம்' (Kiristiani Vanakkam). முதன் முதலாக அன்ரம் டீ பெறோனீக்கா என்பவரால் தொகுக்கப்பட்ட தமிழ் - போர்த்துக்கீச மொழி அகராதி போன்றவற்றையும் கண்டெடுத்தார். அதில் பெறொனிக்கா அகராதியினை மீள்பதிப்பு செய்து அதனை முதல் தமிழாராச்சி மகாநாட்டில் மலேசியாவில் வெளியிட்டார்.

தனிநாயகம் அடிகளார் போர்த்துகலில் கண்டறிந்த Arte da Lingua Malabar என்ற கையேடே தமிழுக்காக அயலவர் எழுதிய முதல் இலக்கணக் கையேடு ஆகும். தாளில் எழுதப்பட்ட இந்தக் கையேடு என்ரிக்கு அடிகளால் 1549-ல் வழங்கிய போர்த்துக்கீசிய மொழியில் அக்காலத்துத் தமிழ் மொழியை விளக்குகிறது. இந்தக் கையேட்டை ஜீன் ஹைன் (Jeanne Hein) என்ற அமெரிக்கர் 2013 ஏப்ரலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

## தாய்லாந்தில் திருவெம்பாவை:

தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடும் பாடல் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவையிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதை உலகுக்கு அறிவித்தார். 1954ம் ஆண்டு தாய்லாந்து சென்ற போது அங்கு பாடப்பட்ட பாடல் இது.

*ஆதியும் அந்தமும் இல்லா அரும்*
*- பெருஞ்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும்*
*- வாந்தடய்கண்*
*மாதே வளருதியோ வன்சேவியோ*
*- நின் செவிதான்*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய*
*- வாழ்த்தொலிபோய்*
*வீதியாய்க் கேட்டாலுமே விம்மி விம்மி*
*- மெய்மறந்து;*

இப்பாடல்களை அடிகளார்க்குப் படித்துக் காட்டிய தாய்லாந்து நாட்டு அரச குரு தாய்லாந்து மொழியிலும் கிரந்தத்திலும் எழுதப்பட்டிருந்த சில ஏடுகளையும் காட்டினார். தாய்லாந்தில் பின்பற்றப்பட்ட இந்து சமயமும், புத்த சமயமும் இந்தியாவிலிருந்து சென்றவைகள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தாய்லாந்து நாட்டிற்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பினை முதன் முதலில் அறிந்து தெரிவித்தவர் தனிநாயகம் அடிகளாரே ஆவார்.

மலாயாவையும் தாய்லாந்தையும் இணைக்கும் நீண்ட குறுகிய இடப்பரப்பில் அமைந்துள்ள 'தாக்குவப்பா' என்னும் இடமே சிலப்பதிகாரம் காட்டும் 'தக்கோலம்' என்பது அடிகளாரின் கண்டுபிடிப்பு. மேலும் அம்மாவட்டத்தில் மணிக் கிராமத்தார் பற்றிய கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டதும் அங்குள்ள இடப்பெயர்களும் சிவபெருமானின் பழைய சிலையும் தமிழ் கலைத் தொடர்பைக் காட்டுவதும் அடிகளாரின் கருத்துக்கு வலுச்சேர்க்கின்றன.

## தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிப்பு:

1963-ல் எம். பக்தவத்சலம் தமிழக முதல்வராக இருந்தபோது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் தனிநாயகம் அடிகளார் உலக நாடுகளில் உள்ள தமிழறிஞர்கள் யாவரையும் ஒன்று திரட்டி ஒரு குழுவாக அமைத்து தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் தமிழாராய்ச்சி மகாநாட்டினை நடத்தும் யோசனையை முன்வைத்தார். இதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையினையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை. இதனையடுத்து அம்மாநாட்டினைத் தாமே முன்னின்று உலகளவிலேயே நடத்த வேண்டும் என்ற உத்வேகம் கொண்டதனால் உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம் உருவாக வழி பிறந்தது.

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் (International Association for Tami Research, IATR) முதல் கூட்டம் தில்லியில் 1964 ஜனவரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தனிநாயகம் அடிகளாருடன், பேராசிரியர் கமில் சுவெலபில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் வ.ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அழைப்பாளர்களாக இருந்து செயற்பட்டனர். மொத்தம் 26 தமிழறிஞர்கள் சேர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1964 ஜனவரி மாதம் 7ம் தேதி தொடங்கி வைத்தனர்.

அந்த அமைப்பின் முதல் தலைவராக பிரான்சு நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர் ஜேன் ஃபிலியோசா தலைவராகவும், ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பேராசிரியர் தொமஸ் பிரோ, அமெரிக்க நாட்டு பேராசிரியர் எமனோ, பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், மு.வரதராசன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் செக்கோசெலவாக்கியா, பிராக் கல்கலைக்கழக பேராசிரியர் கமில் சுவெலபில், தனிநாயகம் அடிகள் ஆகியோர் இணைச்செயலாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

## முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ச்சியாக எட்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளை பல உலக நாடுகளில் நடத்தியது. அடிகளார் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மாநாடுகள் நடைபெற்றன. இவர் பொதுச் செயலாளராக இருந்தபோது மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் 1966ம் ஆண்டு ஏப்ரல் 16 - 23 தேதிகளில் முதல் மகாநாட்டினை நடத்தினார். 1961 ஆண்டில் அவர் மலாய் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றியது மிகவும் துணைநின்றது. அப்போது அமைச்சர்களாக இருந்த வி.தி. சம்பந்தன், வி. மாணிக்கவாசகம் ஆகியோருடன் அடிகளார் பேணிய நல்லுறவால் மலேசிய அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்றது. மாநாட்டிற்கு மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தலைமை தாங்கினார். தமிழக முதல்வர் எம். பக்தவத்சலமும் கலந்து சிறப்பித்தார். புரொயென்காவின் போர்த்துக்கீச-தமிழ் அகராதியை அங்கு மீள்பதிவாக்கம் செய்து இம்மாநாட்டில் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டார்.

தமிழ்பணி செய்யவே இறைவன் தன்னை அழைக்கின்றான் என்று உறுதியாக நம்பிய அடிகளார்;

*என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே.*

என்னும் திருமூலரின் வரிகளைச் சொல்லி தம் உரையை முடிப்பார் அடிகளார். முதல் உலகத் தமிழ் மாநாட்டின் முதல் அமர்வுக்கு அவர் தலைமை தாங்கிய போது மேற்கூறிய வரிகளைக் கூறிய பின்னரே ஆங்கிலத்தில் தம் உரையைத் தொடர்ந்தார்.

## இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு:

1966-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் முதன்மை விருந்தினராக தனிநாயகம் அடிகளார் கலந்து கொண்டமை இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு பெருமையைத் தோற்றுவித்தது.

மூன்றாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1970ம் ஆண்டு ஜுலை 15-18 தேதிகளில் பிரான்சு நாட்டு தலைநகர் பாரீஸில் நடைபெற்றது. நான்காம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1974-ம் ஆண்டு ஜனவரி 3 - 9 தேதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அவ்வரங்குகளில் அடிகளார் சுறுசுறுப்பாகவும் விவேகமாகவும் செயற்பட்டு மாநாட்டின் முன்னோடியாகவும் திகழ்ந்தமையைப் பல வட்டாரங்களிலிருந்து கிடைத்த புகழாரங்கள் சான்று பகரும்.

## ஆய்வு நூல்கள்:

தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களும் எழுதி வெளியிட்டார். தமிழ்த் தூது (1952) என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதினார். அடிகளார் எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் முதல் தொகுப்பு 'தமிழ்த் தூது' என்பதாகும். இது 1952ல் வெளியிடப்பட்டது. அவரது உலகப் பயணங்களின் அனுபவங்கள் 'ஒரே உலகம்' என்ற தலைப்பில் 1963ம் ஆண்டு வெளியிட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் ஆற்றிய தொடர் சொற்பொழிவு 'திருவள்ளுவர்' என்ற மகுடமிடப்பெற்று 1967ல் நூலாக வெளிவந்தது. அடிகளார் எழுதிய 30 ஆய்வுக்கட்டுரைகள் தமிழ் காலாசரம் சஞ்சிகையில் வெளிவந்த 70 கட்டுரைகள் பலவேறு இதழ்களிலும் கருத்தரங்க மலர்களிலும் வெளிவந்துள்ளன.

தமிழைப் பற்றிய ஐரோப்பிய மொழிகளில் வெளி வந்த நூல்களைத் தொகுப்பதன் மூலம் பன்னாட்டு ரீதியில் தமிழ் மொழியை உலகின் கவனத்திற்குக் கொண்டுவர முயன்றார். 'Reference Guide to Tamil Studies' என்ற 122 பக்கங்களைக் கொண்ட உசாத்துணை நூலில் 1335 நூல்களைப் பற்றிய குறிப்புக்களைச் சேர்த்து நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூல் இலத்தின், பிரெஞ்சு, ஜெர்மனி, உருசியம், மலாய், ஆங்கிலம் போன்ற மொழிகளில் தமிழியல் பற்றி வெளிவந்த தகவல்களின் அடிப்படையில் ஒரு தொகுப்பு நூலாக விளங்கிற்று. தமிழாய்வில் ஈடுபட விரும்பும் வெளிநாட்டவருக்கு ஒரு உசாத்துணை நூலாக விளங்கவே இதனை வெளியிட்டார்.

திருவள்ளுவரை கிரேக்கத் தத்துவ ஞானிகளான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோருடன் ஒப்பிட்டுக்காட்டி வள்ளுவம் மேற்கத்திய தத்துவங்களைக் காட்டிலும் மேலோங்கி நிற்பதை சான்றுகள் மூலம் விளக்கினார். சமஸ்கிருதம், பாலி மொழி இலக்கியங்கள் பெரும்பாலும் சமயப் பின்னணியில் எழுதப்பட்டவைகளே. ஆனால், பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமே சமய சார்பற்று தனித்து விளங்கியதையும், இதன் மூலமாகவே தமிழ் இலக்கியம் வேறு எந்த மொழிக்கும் கடன் பட்டதில்லை என்பதையும் இந்த உலகிற்கு ஆய்வுகள் மூலம் விளக்கினார்.

இலங்கையிலிருந்து வெளியான சைமன் காசிச்செட்டி ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் புளூட்டார்க் என்ற நூலை பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரைக் கொண்டு கூடுதல் செய்திகளைச் சேர்த்து பிழைகளைந்து வெளியிட ஏற்பாடு செய்தார்.

## மறைவு:

அறிவாளியாகவும் ஆன்மீகவாதியாகவும் செயல் வீரனாகவும் செயற்பட்ட அடிகளார், உலகில் உள்ள தமிழர்களையும் தமிழறிஞர்களையும் ஒன்று இணைத்த மாவீரன். பக்திச்சுவையும் மனிதாபிமானமும் பரந்தநோக்கும் தமிழிலுள்ள ஏனைய சிறப்புகள் என்றும், குறிப்பாக தேவார, திருவாசகங்களிலும் ஆழ்வார்களின் திருப்பாடல்களிலும் பொதிந்தும் மலிந்தும் கிடக்கும் பக்தியுணர்வை நாம் வேறெங்கும் காணமுடியாத பண்டமாக, தமிழ் இனத்தின் விடிவெள்ளியாகவும் திகழந்த அடிகளார் 1980ம் ஆண்டு செப்டம்பர் 1ம் தேதி மாலை 6.30 மணியளவில் உயிர் நீத்தார்.

அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்னர் ஏப்ரல் 1980ல் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மே மாதம் வேலணையில் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள் எழுதிய தமிழ்மறை விருந்து என்ற நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். அதுவே அவரது இறுதி விழாவாகும்.

1981ல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடிகளாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு, அவரது சிலை ஒன்றும் அன்றைய, தமிழகக் கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்களால் சிலை திறந்து வைக்கப்பட்டது.

1981ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தனிநாயகம் அடிகளின் தமிழ்ச் சேவையினை நினைவு கூர்ந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராகப் பணியாற்றியபோது அவருக்கு இறப்புக்குப் பின்னரான கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

நெடுந்தீவு மக்கள் தமது மண்ணின் மைந்தனாகிய தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர்.

சென்னையில் 2013 பெப்ரவரி 16 அன்று தனிநாயக அடிகளாரின் நினைவை போற்றும் வகையில் நூற்றாண்டு தொடக்க விழா நடைபெற்றது.

மொழிப்பற்றும், மொழி உணர்வும் இருக்கும் நாட்டில்தான் அறிஞர்கள் போற்றப் படுவார்கள், மதிக்கப்படுவார்கள். அறிஞர்களும், ஆய்வாளர்களும் மதிப்போடும், மாண்போடும், சுதந்திரத்தோடும் வாழும் நாட்டில்தான் நல்ல பல இலக்கியங்கள் உருவாகும்.

தமிழ்மொழியை உலக அரங்கில் உயர்த்தி பிற மொழிகளுக்கு இணையான இலக்கண இலக்கியங்களை தமிழ் மொழி தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர் தனிநாயகம் அடிகளார்.

மொழி பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் அம்மொழிக்காக அயராது உழைத்த ஆன்றோர்களையும் சான்றோர்களையும் நினைவில் கொள்ளவேண்டும்.

நன்றி 'தினமலர்'

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

# அளவறிந்து உண்ணுவதும் குணமறிந்து உண்ணுவதும்

- பால. சிவகடாட்சம் -

முதலாவது ஆயுள்வேதப் போதனாசிரியராக வரலாற்றில் அறியப்படும் ஆத்திரேய புனர்வசு என்பவர் தலைமையில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மருத்துவக் கருத்தரங்கு பற்றிய சில தகவல்களைச் சரக சம்ஹிதை என்னும் புராதன ஆயுள்வேத நூல் அறியத்தந்துள்ளது.

ஒருவருக்கு நோய்கள் ஏன், எவ்வாறு ஏற்படுகின்றன என்பது பற்றி மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது. கருத்தரங்கில் பங்குபற்றிய. காசிமன்னனாகிய வாமகர் மனிதன் எவ்வாறு தோன்றினானோ அவ்வாறே நோய்களும் தோன்றின என்று கூறிக்கொள்ளமுடியுமா என்னும் ஒரு கேள்வியை எழுப்பி விவாதத்தைத் தொடக்கிவைத்தார். அதாவது, மனிதன் தோன்றியபோதே அவனுக்கான நோய்களும் தோன்றிவிட்டன என்ற தனது கருத்தைக் கூறாமல் கூறிவைத்தார்.

அங்கு கூடியிருந்த அறிஞர்கள் பலரும் பல்வேறு விளக்கங்களை முன்வைத்தனர். ஆத்மாவே ஒருவரது தோற்றத்துக்கும் அவரது நோய்களுக்கும் காரணமாகின்றது என்றார் பாரிக்சி என்னும் அறிஞர். மனம் சம்பந்தப்பட்ட மூவகைக் குணங்களான சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்பவை நோயைத் தீர்மானிக்கின்றன என்றார் சரலோமா. பரம்பரை என்றார் கௌசிகர். கர்மவினை என்றார் பத்ரகாப்பியர். மனிதரின் தோற்றமும் நோய்களின் தோற்றமும் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகியவற்றின் சுபாவங்களை உள்ளடக்கிய இயற்கையால் தீர்மானிக்கப்படுகின்றது என்றார் பரத்துவாஜர். மனிதரைப் படைத்தவரே நோய்களையும் படைத்தார் என்றார் காங்காயனர். காலமே அனைத்துக்கும் காரணம் என்றார் பிக்சு ஆத்திரேயர்.

மேற்படி அறிஞர்கள் கூறிய காரணிகள் ஒவ்வொன்றுக்கும் நோய்களைத் தோற்றுவிப்பதில் ஓரளவு பங்குள்ளது. எனினும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக உடலின் சமநிலையைப் பேண உதவும் முழுமையான உணவுகளே ஒருவருக்கு நோய்கள் வராமல் தடுக்க உதவுகின்றன என்று விவாதத்தை முடித்து வைத்தார் ஆத்தி ரேய புனர்வசு.

ஆரோக்கியமான உணவு பற்றியும் அதனை அளவறிந்து உண்ணவேண்டியதன் அவசியம் பற்றியும் பண்டைய ஆயுள்வேத நூலோர் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். ஒருவருக்குத் தேவையான உணவின் அளவு அவரது உணவுத்தொகுதியின் சமிபாட்டுத் திறனைப் பொறுத்தது. இந்த சமிபாட்டுத் திறனை ஆயுள்வேத நூலோர் 'அக்னி' என்று குறிப்பிடுகின்றனர். திருவள்ளுவர் இதனைத் 'தீ' என்கிறார்

*தீயளவின்றித் தெரியான் பெரிதுண்ணின்*
*நோயள வின்றி படும்*

திருக்குறள்: 947


தனது சமிபாட்டுத் தீயின் அளவு தெரியாமல் பெருக்க உண்ணும் ஒருவருக்கு நோய்களும் அளவில்லாமல் பெருகுகின்றன என்கிறார் வள்ளுவர்,

சமிபாட்டுத் 'தீ' (digestive fire) என்பது எல்லோருக்கும் ஒரே அளவாக இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒருவரது உடலமைப்பு, உடலுழைப்பு என்பவற்றைப் பொறுத்து இது வேறுபடும். வயலிலே வியர்வை சிந்தி உழைக்கும் ஒரு விவசாயிக்கும் உடற்பயிற்சி எதுவும் இல்லாமல் அலுவலக அறையில் கதிரைமேல் உட்கார்ந்து வேலை செய்யும் எழுதுவினைஞருக்கும் இந்தத் 'தீ' ஒரே அளவில் இருக்க முடியாது.

*அற்றால் அளவறிந்து உண்க*
*- அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கு மாறு*

திருக்குறள்: 943

என்னும் குறளில், முன்னர் தான் உண்டது சமிபாடு அடைந்துவிட்டதை உணர்ந்து தனக்குத் தேவையான உணவை அளவோடு உண்பதனால் ஒருவர் தமது உடம்பை நலமாகப்பேணி நீண்ட காலம் வாழ்க்கையை அனுபவிக்கமுடியும் என்று வள்ளுவர் கூறியிருப்பதைக் கவனிக்கலாம்.




ஒருவருக்குத் தேவையான உணவு என்பது அவரது சமிபாட்டுத் தீயுடன் கூடவே அவரால் உட்கொள்ளப்படும் உணவின் குணத்தையும் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. இதைக் கருத்தில் கொண்டு தான் உணவினை இலேசான உணவு, கனமான உணவு என ஆயுள்வேத நூலோர் வகுத்துள்ளனர். இலேசான உணவுகளுடன் ஒப்பிடுகையில் கனமான உணவுகளைக் குறைந்த அளவிலேயே உண்ண வேண்டும்.

அரிசிச்சோறு, உழுந்து, காடை, கௌதாரி, இரலைமான், முயல், சாம்பார் என்பன இலேசான உணவுக்கு உதாரணமாகக் கூறப்படுகின்றன. அதேசமயம் கடலை போன்ற அவரையினத் தானியங்களின் துவையல், கருப்பஞ்சாறு, பால், எள்ளு, பச்சைப்பயறு, சதுப்பு நிலத்திலும் கடலிலும் வாழும் விலங்குகளின் இறைச்சி என்பன கனமான உணவுகளாகக் கொள்ளப்படுகின்றன. பொதுவாகக் கொழுப்புச் சத்தும் சீனிச்சத்தும் நிறைந்த உணவுகளைக் கனமான உணவுகளாகக் கருதமுடியும்.

கனமான உணவுகளை உண்ணும் ஒருவர் வயிறு முட்டும்வரை சாப்பிடுவது தவறு. கனமான உணவு உண்ட பின்னர் பயற்றம் உருண்டை, அவல் உருண்டை போன்றவற்றை உண்ணக்கூடாது. பசியுடன் இருக்கும்பொழுதுகூட இவற்றை அளவுடன் உண்ணவேண்டும். இறைச்சிவற்றல், காய்கறிவற்றல், கிழங்குவகைகள், பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி, மீன், தயிர் என்பவற்றைத் தொடர்ந்து சாப்பிடக்கூடாது. நெல்லரிசிச் சோறு, உழுந்து, உப்பு, நெல்லிக்காய், பால், நெய். வரண்ட பிரதேசத்து விலங்குகளின் மாமிசம், தேன் என்பவற்றை அளவோடு தொடர்ந்து சாப்பிட்டு வரலாம். திப்பிலி (long pepper), உப்பு ஆகியவற்றை ஒரு போதும் அளவுக்கு அதிகமாக எடுத்தல் கூடாது.

தேவையான அளவிலும் கூடுதலாக உண்பது உடல் நலத்துக்குக் கேடு. அவ் வாறே பசிக்கும்போது சாப்பிடாமல் விரதம் இருப்பதும் உடலைப் பலவீனப்படுத்தும். தேவையான அளவிலும் குறைவாக எடுக்கப்படும் உணவு வாதம் தொடர்பான நோய்களைத் தோற்றுவிக்கின்றது. அதே சமயம் அளவுக்கு மீறிய உணவானது வாதம், பித்தம், கபம் தொடர்பான அனைத்து தோஷங்களையும் அதிகரிக்கச் செய்கின்றது என்கின்றனர் ஆயுள்வேத நூலோர்

*மிகினும் குறையினும் நோய்செய்யும்*
*- நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று.*

திருக்குறள்: 941

என்னும் குறளுக்குப் பரிமேலழகர் உட்படப் பழைய உரையாசிரியர்கள் 'உண்ணும் உணவின் அளவு தேவையானஅளவிலும் கூடினும் குறையினும் வாதம் பித்தம், கபம் எனப்படும் மூன்றும் ஒருவருக்கு நோயை ஏற்படுத்தும்' எனப் பொருள் கூறியுள்ளார்கள்.

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு*
*- அருந்தியது*
*அற்றது போற்றி உணின்*

திருக்குறள்: 942

முன்னர் சாப்பிட்ட உணவு சமிபாடு அடைந்து விட்டதை உணர்ந்த பின்னரேயே மறுபடி உண்ணவேண்டும். அதாவது பசியை ஓரளவு உணரும்போதுதான் அடுத்த உணவை உட்கொள்ளத் தயாராக வேண்டும். சாப்பாட்டு விடயத்தில் மனக்கட்டுப்பாடு அவசியம். தாராளமாகவும் செலவில்லாமலும் கிடைக்கின்றது என்பதற்காகக் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் கண்டதை எல்லாம் உண்டு வயிற்றை நிரப்பிக் கொள்ளக்கூடாது. உலகம் முழுவதும் படையல் போட்டு வைத்தாலும் பசித்தால் மட்டுமே உண்போம் என்றிருப்பவர்களிடம் யமனுக்கு வேலை இருக்காது என்கின்றார் தேரையர் என்னும் தமிழ் மருத்துவ நூலாசிரியர்.

*ஞாலந்தான் மடைத்திடினும் பசித்தொழிய*
*- உண்ணோம்*
*நமனார்க்கு ஏதுகவை நாம் இருக்கும்*
*- இடத்தே*

முன்னர் சாப்பிட்ட உணவு சமிபாடு அடைந்த பின்னரும்கூட அளவோடுதான் உண்ணவேண்டும். அப்போதும் ஒத்துப் போகாத உணவுகளைத் தவிர்த்து உண்ண வேண்டும்.

*அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல*
*துய்க்க துவரப் பசித்து*

திருக்குறள்: 944

*மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபா டில்லை உயிர்க்கு.*

திருக்குறள்: 945

மேற்காணும் குறள்களில் வரும் 'மாறல்ல', 'மாறுபாடில்லாத' என்னும் பதங்களுள் பல உண்மைகள் மறைந்துள்ளன. ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற அல்லது ஒருவரின் இயல்புக்கு மாறான உணவுகளையே மேற்படி பதங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. ஒருவர் தாம் வாழும் சூழலுக்கும் காலத்துக்கும் ஏற்ற உணவைத் தெரிந்து உண்ணவேண்டும். குறிப்பிட்ட சில உணவுகளைச் சேர்த்துச் சாப்பிட்டால் உடலுக்குக் கெடுதல் விளையும். உதாரணத்துக்கு எந்த வகை மீனையும் பாலுடன் சேர்த்து உண்ணக் கூடாது என்கிறார் ஆயுள்வேதப் போதனாசிரியரான ஆத்திரேய புனர்வசு. உண்ணும் உணவு மாத்திரமல்லாமல் உணவைத்தயாரிக்கும் முறையும் ஒரு உணவை நஞ்சாக்கிவிடும். இதற்கு உதாரணமாக மயில் இறைச்சியை ஆமணக்கம் தடியில் செருகி ஆமணக்கம் எண்ணெயில் புரட்டி ஆமணக்கு விறகுத் தீயில் வாட்டி எடுத்து உண்டால் உடனடியாக மரணம் சம்பவிக்கும் என்கிறார் ஆயுள்வேத நூலாசிரியர்.

ஒருவரது ஆரோக்கியத்தைத் தீர்மானிப்பதில் முக்கியமான பங்கை வகிப்பது அவரது உணவாகும். மனிதருக்கு ஏற்படக்கூடிய நோய்களுள் பெரும்பாலானவை ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகளினாலே தோற்றுவிக்கப்படுகின்றன. புகைத்தல், அளவுக்குமீறி மது அருந்துதல் என்பவற்றோடு முறையாகத் தயாரிக்கப்படாத உணவுகளையும், பதப்படுத்தப்பட்ட உணவுகளையும், ஒன்றோடொன்று சேரக்கூடாத உணவுகளையும், எளிதில் சமிபாடு அடையாத உணவுகளையும் தவிர்த்துவிட்டால் நீண்டகாலம் நோயின்றி வாழ முடியும். இதுவே மருத்துவ நூலோர் கண்டமுடிபு.

நாவுக்கரசரும் சம்பந்தரும் வாழ்ந்த காலப் பகுதியில் இந்தியாவுக்கு வருகை தந்தவர் சீனதேசத்துப் பௌத்தகுருவான ஹியூன்சாங் (HIUEN TSANG). வடக்கே ஹர்ஷவர்த்தனனும் (629-645 CE) தெற்கே காஞ்சிபுரத்தில் திருநாவுக்கரசரால் சமணத்தில் இருந்து சைவத்துக்கு மதமாற்றம் செய்யப்பட்ட மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மனும் ஆண்டு கொண்டிருந்த காலம் அது.

அக்காலப்பகுதியில் இந்தியாவில் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ வசதிகள் பற்றி ஹியூன்சாங் எழுதி வைத் துள்ளார். நகரங்களையும் ஊர்களையும் ஊடறுத்துச்செல்லும் பெருந்தெருக்களில் அறச்சாலைகளைத் தாம் கண்டதாகவும் அச்சாலைகளில் பிரயாணம் செய்வோர்க் கும் ஏழைகளுக்கும் உணவும் பானமும் வழங்கப்பட்டதோடு மருத்துவர்கள் அவர்களைப் பரிசோதித்துத் தேவையான மருந்துகளையும் கொடுத்ததாகவும் ஹியூன்சாங் குறிப்பிட்டுள்ளார்.

'நோயாளி ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுமுன்னர் அந்நோயாளி இரண்டு கிழமைகளுக்கு விரதம் அனுட்டிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார். இதன் பின்னரேயே அவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. எனினும் நோயாளி விரதம் அனுட்டிக்கும் அந்த இரண்டு கிழமைக்குள் நோய் தானாகவே மாறிவிடுவதும் உண்டு' என்று பதிவுசெய்துள்ளார் ஹியூன்சாங். பெரும்பாலான நோய்கள் தவறான உணவுப் பழக்க வழக்கங்களால் தோற்றுவிக்கப்படுகின்றன என்ற உண்மையை அக்காலப்பகுதியில் இந்திய மருத்துவர்கள் நன்கு அறிந்துவைத்திருந்தனர் என்பதையே இது காட்டுகின்றது.



Sivakadadcham@thaiveedu.com

# பெருமைக்குரிய மாநாட்டு மையக் கரு: கீழடி எம் தாய்மடி




பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வடஅமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் நடைபெறுவது பல வழிகளிலும் சிறப்புக்குரியதாகின்றது. வடஅமெரிக்கப் பல்கலைக்கழங்களில் தமிழ் இருக்கைகளும் தமிழ்மொழிக் கல்விப் பிரிவுகளும் உருவாகிவரும் நிலையில் இந்த மாநாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

வடஅமெரிக்காவில் ஏறக்குறைய ஐந்து இலட்சம் தமிழர்கள் நிரந்தரமாகக் குடியேறியுள்ளனர் என்ற கூற்று ஏறக்குறைய பொருத்தமானதே. வடஅமெரிக்கத் தமிழர்கள் தொடரவிருக்கும் தலைமுறைகளுக்கு மொழி, பண்பாடு சார்ந்த வலுவான தளத்தை அமைத்துக் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இது பெருஞ் சவால்கள் நிறைந்த பணி என்பதே உண்மை.

குடியேறிய தமிழர்களின் பண்பாட்டுப் பேணல் முயற்சிகளுக்கு வலிமை வழங்கும் ஒரு செயற்பாடாவே வடஅமெரிக்காவில் நிகழும் இந்த மாநாட்டை நாம் நோக்கலாம்.

இந்த மாநாடு கொண்டிருக்கும் மையக்கருவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே அமைந்துவிடுகின்றது.

‘கீழடி - நம் தாய்மடி’ என்பதே இந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் மையக் கருப்பொருளாக முன்வைக்கப்பட்டு, சிறந்த ஆய்வுகளும் இந்த மாநாட்டில் வெளியாகவுள்ளன என்பது மகிழ்வாக செய்தியே.

கீழடி என்ற பழந்தமிழர் பண்பாட்டு அகழ்வாய்வுத் தளத்தை உலகளவிய தமிழர்களுக்கு அறிமுகம் செய்வதுடன், பிறவினத்தோருக்கும் இனத்தின் பழமையை உணரச்செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது தமிழர்களின் தலையாய கடமையாகும். இதன் பொறுப்புணர்ந்து செயலாற்றிய மாநாட்டுக் குழுவினர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

முதிர்ச்சியற்றதும் உள்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதுமான விவாதங்களை உடைத்து, தமிழருடைய வரலாற்றுப் பழமையை உலகப் பரப்பில் நிலைநிறுத்துவதற்கு இக்காலகட்டத்தில் உதவுவன அகழ்வாய்வுகளே.

சிந்துவெளி, ஆதிச்ச நல்லூர், கொற்கை, பொம்பெரிப், திருக்கேதீஸ்வரம் (இலங்கை) போன்ற அகழ்வாய்வு வரிசையில் இணைந்திருக்கும் புதிய அகழ்வாய்வுத் தளமே கீழடி.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகத்தில் மிகவும் பண்பட்ட ஒரு நகர நாகரிகம் இருந்ததற்கான சான்றுகள் பலவற்றையும் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. பல தொல்லியற் பொருட்கள் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டாலும் சிந்துவெளியைப் போன்றதொரு முழுமையான நகர நாகரிக அடையாளங்களைக் காண முடியாதிருந்தது.

இந்நிலையில்தான் மதுரைக்குத் தென்கிழக்கில் 12 கிலோமீற்றர் தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்திருக்கும் கீழடி என்ற சிறு ஊர் அகழ்வாய்வுத் தளமாகக் கண்டறியப்பட்டது. இதுவே தமிழகத்தில் கண்டறியப்பட்ட நகர வாழ்வுக்கான அறிவியல் சான்றுகளை கொண்ட தளமாகக் கருதப்படுகின்றது.

இது குறித்து தொல்லியல் துணை அகழ்வாராய்ச்சியாளர் வீரராகவன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“தென்தமிழகத்தின் முக்கிய நீராதாரமாக விளங்கும் வைகை நதி, மேற்கு தொடர்ச்சி மலைத்தொடரில் வெள்ளிமலை அருகிலிருந்து உற்பத்தியாகி தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வழியே பாய்கிறது. தொல்லியல் வளமிக்க பகுதியாக விளங்கினாலும் கூட இதுகாறும் வைகை நதி பள்ளத்தாக்கு பகுதியில் அகழாய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

2013-14ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் சுமார் 293 பல்வகை தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள், வைகை நதி பள்ளத்தாக்கு பகுதியில் அடையாளம் காணப்பட்டன. அவற்றுள் மதுரை அருகே, சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழடி தொல்லியல் அகழாய்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஊர் மதுரையிலிருந்து 12 கி.மீ தொலைவில், தென்கிழக்கு திசையில் ராமேஸ்வரம் செல்லும் பண்டைய வணிகப் பாதையில், வைகை நதியின் தென்கரையில் அமைந்துள்ளது.




தற்போதைய கீழடி ஊரிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில், மணலூர் கண்மாயின் மேற்கரையில் பள்ளிசந்தை திடல் என்றழைக்கப்படும் தொல்லியல் மேடொன்று உள்ளது. தரையிலிருந்து சுமார் இரண்டரை மீட்டர் உயரத்து காணப்படும் இம்மேடு, தற்பொழுது தென்னந்தோப்பாக பயன்பாட்டில் உள்ளது. முன்பு நிலத்தினை உழும்பொழுது பலவகையான மட்கலன்கள், தொல்பொருட்கள், பெரிய அளவிலான சுட்ட செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகள் இங்கு கிடைக்கபெற்றுள்ளன. இம்மேட்டின் கிழக்கே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் கொந்தகை என்ற ஊருக்கு செல்லும் பாதையில், இதனோடு தொடர்புடைய ஈமக்காடும் அமைந்துள்ளது. இங்கு பல ஈமத்தாழிகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

கீழடி மற்றும் கொந்தகை உள்ளடக்கிய பகுதிகள் பிற்காலப் பாண்டியர் காலத்தில் ‘குந்திதேவி சதுர்வேதிமங்கலம்’ என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. கீழடியுள்ள அர்ஜுனேஸ்வரர் கோயிலில் காணப்படும் 12 மற்றும் 13ம் நூற்றாண்டு கல்வெட்டுகளில், ‘வேலூர் குளக்கீழ்’ என்ற நாட்டு பிரிவின் கீழ் அமைந்திருந்ததாக குறிக்கப்படுகிறது. இதேபோன்று பல்வகை தொல்லியல் ஆதாரங்கள் இருந்தும்கூட வைகை நதி பள்ளத்தாக்கு பகுதியில் விரிவான தொல்லியல் அகழாய்வு ஏதும் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. அனுப்பானடி, பரவை, கோவலன் பொட்டல், தி.கல்லுபட்டி, சங்க கால பாண்டியர்களின் துறைமுகமாக இருந்த அழகன்குளம் போன்ற இடங்களில் சிறிய அளவில் மாத்திரமே அகழாய்வு நடைபெற்றுள்ளது.

இவற்றினை அடிப்படையாக வைத்து, நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் வைகை நதி பள்ளத்தாக்கு பகுதியில், இரும்புக் காலம் முதல் பல்வேறு காலக் கட்டங்களில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி மற்றும் உருமாற்றத்தினை அறிந்து கொள்ளும் வகையில், சிவகங்கை மாவட்டம், கீழடி கிராமத்தில் நடப்பாண்டில் தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மார்ச் 2018 முதல் நடைபெற்று வரும் அகழாய்வில், கி.மு 3ம் நூற்றாண்டு முதல் கி.பி 3ம் நூற்றாண்டை சார்ந்த தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் பெரிய அளவிலான சுட்ட செங்கற்களை கொண்டு கட்டப்பட்ட கட்டட பகுதிகள், பெரிய கூரை ஓடுகள், முத்து மணிகள், கண்ணாடி மற்றும் பல்வகையான கல்மணிகள், சங்கு வளையல்கள், சுடுமண் பொம்மைகள், அம்மி, குழவி, இரும்பு, செப்பு பொருட்கள் போன்றவை அடங்கும்.

ரோமானிய நாட்டுடன் இவ்விடம் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததற்கு சான்றளிக்கும் வகையில், வணிகர்களால் கொண்டு வரப்பட்ட ரூலட் மற்றும் அரிட்டைன் வகை மண்பாண்ட துண்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் வரலாற்று தொடக்க காலத்தை சேர்ந்த கருப்பு சிவப்பு மண்பாண்ட வகை, வெள்ளை வண்ணம் பூசப்பட்ட கருப்பு சிவப்பு மண்பாண்ட வகை மற்றும் ரசட் கலவை பூசப்பட்ட மண்பாண்ட வகையும் அகழாய்வில் கிடைத்துள்ளன.

இது தவிர்த்து தனி மனிதர்களின் பெயருடன் தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்பு கொண்ட மண்பாண்ட ஓடுகள் இங்கு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்” என்று கூறியிருக்கின்றார்.

தமிழகத்தில் முன்பெல்லாம் நடந்த அகழ்வாராய்ச்சிகளில் முதுமக்கள் தாழிகளும், மட்பாண்டங்களும் மட்டுமே கண்டெடுக்கப்பட்டதால் தமிகத்தில் மக்கள் வாழிடங்களுக்கான சான்றுகள் இல்லையென்று சொல்லப்பட்டு வந்தது. தமிழகம் மட்டுமல்ல, தென்னிந்தியாவில் அகழாய்வு நடத்தப்பட்ட எந்த இடத்திலும் மனிதர்கள் வாழ்ந்ததற்கான கட்டிடச்சான்றுகள் கிடைத்ததில்லை. அதனை உடைத்திருக்கிறது கீழடி அகழாய்வு. மேலும் இந்தியாவில் உள்ள கல்வெட்டுகளில் பெரும் பாலானவை தமிழ் மொழியில் எழுதப்பட்டவையென்றாலும் தமிழகத்தில் இதுவரை கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் எல்லாமே, இந்த மண்ணில் வாழ்ந்த அரசர்களின் பெருமைகளைத் தாங்கிய ஆவணங்களாகவே இருந்துவந்திருக்கிறது. ஆனால், கீழடியில் கிடைத்த பொருட்கள் மட்டுமே மக்களின் வாழ்க்கையைச் சொல்பவையாக இருக்கின்றன என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

கீழடியில் கண்டறியப்பட்ட கட்டடங்கள் பெரிய செங்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. பட்டினப்பாலை உள்ளிட்ட சங்ககால நூல்களில் குறிப்பிட்டுள்ளபடி, இங்கு உறைகிணறுகள் இருந்ததற்கான அடையாளங்கள் கிடைத்துள்ளன. ஓர் இடத்தில் நீரைத் தேக்கிவைத்தது, அதனை ஒவ்வொரு இடத்திற்கும் கொண்டுசென்றது, அங்கிருந்து கழிவுநீரை வெளியேற்றியது என்று பல தகவல்கள் கீழடியில் கண்டறியப்பட்டிருக்கிறது. மிகவும் நேர்த்தியான இந்த கட்டமைப்பு, சுமார் 2200 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மண்ணில் நகர நாகரிகம் இருந்ததாகச் சொல்கிறது. மேலும் இது ஊருக்கு வெளியே இயங்கிய தொழிற்சாலையின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. பெண்களின் அழகுசாதனப்பொருட்களும் கீழடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. யானைத்தந்தத்தினால் செய்யப்பட்ட சீப்பு மற்றும் தாயக்கட்டைகள், புருவம் தீட்டும் கருவி, மணிகள் கோர்த்த அணிகலன்கள், முத்துகள் உட்பட பல பொருட்கள் அதிகளவில் கிடைத்துள்ளன. கீழடியில் கண்டறியப்பட்ட எந்த ஒன்றிலும் இதுவரை சமய வழிபாடு குறித்த தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

கீழடியில் இருந்து இதுவரை சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால், அவற்றில் ஏழு பொருட்கள் மட்டுமே இதுவரை மேலை நாடுகளில் கார்பன் -14 பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதில் இரண்டு பொருட்களின் காலம் சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முன்னையது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரசியல் அழுத்தங்களினால் கீழடி அகழாராய்ச்சி முற்றிலும் நிறுத்தப்பட்டு இப்பொழுது சென்னை நீதிமன்ற ஆணைக்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டாலும், இந்திய நடுவண் அரசின் ஒப்புதல் கிட்டாமையால் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பப்படாமல் தாமதப்படுத்தப்படுகின்றன. மொத்தத்தில் கீழடி ஆராய்ச்சி முறையாக நடத்தப்பட்டால் தமிழர் வரலாறு எவ்வளவு பழமையானது எனத் தெரிய வரும்.

சிக்காக்கோவில் நடைபெறும் மாநாட்டில் கீழடியில் ஒரு தொல்பொருள் அருங்காட்சியகத்தை அமைப்பதற்காக முடிவு வெளியிடப்படவுள்ளதாக அறிகின்றோம். தமிழகத்திலும் இலங்கையிலும் கிடைக்கப்பெறும் சான்றுகள் அனைத்தையும் சேகரித்து பெருமைக்குரிய தமிழர் வரலாற்று அருங்காட்சியகத்தை அமைப்பது வரலாற்றுத் தேவையாகும்.

இந்த மாநாடு வழியாக, இந்த முயற்சி முனைப்போடு முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

***உசாத்துணை:***


- *https://sivaganga.nic.in/ta/கீழடி - அகழ்வாராய்ச்சி*
- *https://www.vikatan.com/news/tamilnadu/147102-the-theme-for-tenth-international-tamil-conference-announced.html*
- *https://ta.wikipedia.org/wiki/கீழடி, சிவகங்கை மாவட்டம்*
- *https://fetnaconvention.org/ta/*


**- பொன்னையா விவேகானந்தன்**

■ ■ ■